# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று: 100 புரட்டாசி 03

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வெள்ளி, செப்டம்பர் 19, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**சட்டவிரோத போதைப்பொருள் நாடுகளின் பட்டியலில் இந்தியா: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பால் பரபரப்பு**


....2-ம் பக்கம்

**ராகுல் காந்தியின் வாக்கு திருட்டு புகார் எதற்காக? அமித்ஷா பேச்சால் பரபரப்பு**

...3-ம் பக்கம்

**உலக தடகள சாம்பியன்ஷிப்: பதக்க வாய்ப்பை இழந்து வெளியேறினார் நீரஜ் சோப்ரா**

....6-ம் பக்கம்






● தி.மு.க. தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், அ.தி.மு.க.வின் நாளிதழான நமது எம்.ஜி.ஆர் மற்றும் நமது அம்மா பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியர் மருது அழகுராஜ் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார். இந்நிகழ்வின்போது, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமை நிலைய அலுவலகச்செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### ஒவ்வொரு காட்சியும் நெஞ்சை உருக்குகிறது: இந்தியா உள்பட மொத்த நாடுகளும் இணைந்து

# காசா கொடூரத்தை உடனே தடுத்து நிறுத்த வேண்டும்

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, செப். 19-

**காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளை தடுக்க இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.**

**பதறச் செய்கிறது...**



இது தொடர்பாக அவர் பகிர்ந்த சமூகவலைதளப் பதிவில், "காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அதிர்ந்து போயிருக்கிறேன். அங்கிருந்து வெளிவரும் ஒவ்வொரு காட்சியும் நெஞ்சைப் பதறச் செய்கிறது. பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல், பட்டினியில் தவிக்கும் சிறார்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் குண்டுவீச்சு, ஐ.நா. விசாரணை ஆணையமே அங்கு இனப்படுகொலை நடந்து வருவதாக அளித்துள்ள அறிக்கை ஆகிய அனைத்தும், எந்த மனிதரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களை அங்கு அனுபவித்து வருவதையே காட்டுகிறது.

**இப்போதே தடுக்க...**

அப்பாவி மனித உயிர்கள் இப்படி கொல்லப்படும் போது, அமைதியாக இருப்பது என்பது ஒரு தேர்வாக இருக்க முடியாது. நம் ஒவ்வொருவரின் மனசாட்சியும் விழிக்க வேண்டும். இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும்." எனக் கூறியுள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்துவரும் காசா போரில் இதுவரை 65000-க்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சென்னையில் நடைபெற்ற

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: துணை முதல்வர் உதயநிதி நேரில் ஆய்வு

சென்னை, செப். 19-

**சென்னையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

சென்னை சோழிங்கநல்லூரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிற்கு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- மக்களைத் தேடி அரசு சேவைகள் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட்டு வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்களை தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். இன்றைய தினம், சென்னை சோழிங்கநல்லூர் தொகுதி மண்டலம்-15, வார்டு 195, துரைப்பாக்கத்தில் நடைபெற்ற முகாமுக்குச் சென்று அங்கு வழங்கப்படும் சேவைகளை ஆய்வு செய்தோம். பொதுமக்களின் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வுகளை வழங்க வேண்டும் என்று முகாமில் இருந்த பணியாளர்களை அறிவுறுத்தினோம். முகாம் குறித்த பொதுமக்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் பெற்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டி.என்.பி.எஸ்.சி. குரூப்-2 தேர்வு ஹால் டிக்கெட் வெளியீடு

சென்னை, செப். 19-

**டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2 தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியாகியுள்ளது.**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) நடத்தும் குரூப் 2 தேர்வுக்கான தேர்வுக்கூட அனுமதி சீட்டு (ஹால் டிக்கெட்) வெளியிடப்பட்டு உள்ளது. இந்த ஹால் டிக்கெட்டுகள், www.tnpsc.gov.in, www.tnpscexams.in என்ற தேர்வாணையத் திற்கான இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளன.

விண்ணப்பதாரர்கள் அனைவரும் அவர்களுடைய ஒருமுறை பதிவுதளத்தின் மூலம் மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்யும்படி தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஒருங்கிணைந்த குடிமை பணிகளில் (தொகுதி 2 மற்றும் 2ஏ பணிகள்) அடங்கியுள்ள பதவிகளுக்கான ஒளிக்குறி உணரி வகை தேர்வானது, செப்டம்பர் 28-ந்தேதி முற்பகலில் நடைபெற உள்ளது என்றும் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் வெளியிட்ட செய்தி குறிப்பு தெரிவிக்கின்றது.

### கர்நாடகா ஆலந்த் தொகுதியில் 6,000 வாக்காளர் பெயர்கள் நீக்கம்:

# மோசடி செய்பவர்களை தலைமை தேர்தல் ஆணையர் காப்பாற்றுகிறார்

## ஆதாரங்களுடன் ராகுல் மீண்டும் குற்றச்சாட்டு

புதுடெல்லி, செப். 19-

**கர்நாடகாவின் ஆலந்த் தொகுதியில் 6,000 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டிய ராகுல் காந்தி, அதற்கான ஆதாரங்களை வெளியிட்டார். மேலும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்வர் குமார், வாக்கு மோசடி செய்பவர்களை காப்பாற்றுகிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இத்தகைய திருத்தத்தின் மூலம் வாக்காளர்கள் பலரின் பெயர்கள் பட்டியலில் இருந்து திட்டமிட்ட ரீதியில் நீக்கப்படுவதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டி வருகிறார். தேர்தல் ஆணையத்தின் சிறப்பு தீவிர திருத்தத்தைக் கண்டித்து வாக்காளர் அதிகார யாத்திரை என்ற சுற்றுப் பயணத்தை ராகுல் காந்தி பீகாரில் மேற்கொண்டார்.

இந்நிலையில், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்படுவது குறித்து தரவுகளின் அடிப்படையில் செய்தியாளர்களுக்கு விளக்கினார். ராகுல் காந்தி கூறியதாவது: வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்படுவது குறித்து நான் தொடர்ந்து கூறி வருகிறேன். அதற்கான ஆதாரங்களையும் வெளியிட்டு வருகிறேன்.

கர்நாடகாவின் ஆலந்த் சட்டப்பேரவைத் தொகுதியிலும் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இந்த தொகுதியில் 6,018 வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. 2023 தேர்தலின்போதும் ஆலந்த் தொகுதியில் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. அதன் எண்ணிக்கை இதைவிட அதிகம். ஆனால், யாரோ ஒருவர் தற்போது 6,000 வாக்காளர்களை நீக்கி உள்ளார். அது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட வாக்காளரின் பெயர் நீக்கப்பட்ட போது, அதை அவரது உறவினர் கண்டுபிடித்துள்ளார். தனது மாமாவின் பெயர் நீக்கப்பட்டது குறித்து அந்த பெண், சோதித்துள்ளார். அப்போதுதான், அந்த வேலையைச் செய்தது தனது பக்கத்து வீட்டுக்காரர் என்பது தெரிய வந்துள்ளது. அவரிடம் இது பற்றி கேட்டபோது, தான் நீக்கவில்லை என தெரிவித்துள்ளார். பெயரை நீக்கியவருக்கோ பெயர் நீக்கப்பட்டவருக்கோ இது தெரியவில்லை. வேறு சில சக்திகள் இந்த செயல்முறையை கடத்தி பெயர்களை நீக்கி உள்ளன.

(கடைசி பக்கம் பார்க்க)

### கட்சி விவகாரத்தில் நான் சொல்வதுதான் இறுதி:

# அ.தி.மு.க. விவகாரத்தில் பா.ஜ.க. தலையீடு இல்லை

## டெல்லி பயணம் குறித்து இ.பி.எஸ். விளக்கம்

சேலம், செப். 19-

**கூட்டணியை பொறுத்தவரை அ.தி.மு.க.வில் நான், பா.ஜ.க.வில் அமித்ஷா கூறுவது தான் இறுதி என தெரிவித்துள்ள எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, அ.தி.மு.க. விவகாரத்தில் அமித்ஷாவோ, பா.ஜ.க. தலையீடோ இல்லை என்று டெல்லி பயணம் குறித்து விளக்கமளித்துள்ளார்.**



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி நேற்று ஓமலூரில் உள்ள, சேலம் புறநகர் மாவட்டக்கழக அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அருகில் முன்னாள் அமைச்சர் செம்மலை, சேலம் புறநகர் மாவட்டக்கழகச் செயலாளர் ஆர்.இளங்கோவன், சேலம் புறநகர் மாவட்ட பேரவைச் செயலாளர் சு.மணி, கெங்கவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி ஆகியோர் உடனிருந்தனர்.

டெல்லி பயணம், அமித்ஷாவுடன் சந்திப்பு உள்ளிட்டவை குறித்து சேலம் ஓமலூரில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

வெளிப்படையாக அறிவித்துவிட்டே உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தேன். துணை ஜனாதிபதியை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன். டெல்லியில் உள்துறை அமைச்சர் உடனான சந்திப்பு வெளிப்படையானது. அரசு காரில் போய் தான் சந்தித்தேன். முத்துராமலிங்க தேவருக்கு பாரத ரத்னா வழங்க வேண்டுமென உள்துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்தோம். என் எழுச்சிப் பயணம் சிறப்பாக இருந்ததாக அமித்ஷா பாராட்டினார். அ.தி.மு.க. உட்கட்சி விவகாரம் குறித்து அவரிடம் நான் பேசவில்லை. அ.தி.மு.க. விவகாரத்தில் பா.ஜ.க. தலையீடு இல்லை. அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில் தலையிடமாட்டேன் என அமித் ஷா ஏற்கெனவே கூறிவிட்டார்.

முகத்தை மறைக்க வேண்டிய அவசியம் எனக்கு எள்முனை அளவும் கிடையாது. காரில் வெளியே வரும்போது என் முகத்தை துடைத்தேன். இதனை அரசியல் செய்தது வேதனை அளிக்கிறது. மத்திய அரசுடன் இணக்கமாக இருந்ததாலே 4 ஆண்டுகள் சிறப்பான ஆட்சியை கொடுக்க முடிந்தது. நான் முதல்வராக இருக்கும்போது மத்திய அரசிடம் பேசி ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினேன். கூட்டணியை பொறுத்தவரை அ.தி.மு.க.வில் நான், பா.ஜ.க.வில் அமித்ஷா கூறுவது தான் இறுதி.

அ.தி.மு.க.வில் கட்சி கட்டுப்பாட்டை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களிடம் தொடர்பு வைத்திருந்தால் நடவடிக்கை பாயும் என்பதே சிறப்பு தீர்மானம். அ.தி.மு.க. சிறப்பு தீர்மானத்தின்படி செங்கோட்டையன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜெயலலிதாவால் வெளியேற்றப்பட்டவர் தினகரன். 10 ஆண்டுகள் கட்சியில் இருந்து அவர் நீக்கப்பட்டிருந்தார்.

என்னை முகமூடி அணிந்து சென்றதாக தினகரன் கடுமையாக விமர்சனம் செய்கிறார். டிடிவி தினகரன் தான் முகமூடி அணிந்து

(கடைசி பக்கம் பார்க்க)

### அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தும் வகையில்

# பொதுக்கூட்ட விதிமுறைகளை காவல்துறை வகுக்க வேண்டும்

## த.வெ.க. வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, செப். 19-

**அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு அனுமதியளிக்கும் போது, அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விதிமுறைகளை வகுக்கவும், பொதுச் சொத்துகள் சேதமடைந்தால் அதற்கான இழப்பீட்டை வசூலிக்கும் விதமாக ஒரு குறிப்பிட்ட தொகையை டெபாசிட் செய்யும் வகையில் விதிமுறைகளை வகுக்கவும் தமிழக காவல் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய உள்ளார். கடந்த செப்.13-ம் தேதி திருச்சியில் பிரச்சாரத்தை தொடங்கிய அவர், செப்டம்பர் 20-ம் தேதி முதல் டிசம்பர் 20-ம் தேதி வரை ஒவ்வோரு வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்ய உள்ளதாக கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி பிரச்சாரத்துக்கு கடுமையான நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, விஜய் பிரச்சாரத்துக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்களை எந்த பாரபட்சமும் இன்றி பரிசீலித்து, அனுமதி வழங்க மாநிலம் முழுவதும் உள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்க டி.ஜி.பி.-க்கு உத்தரவிடக் கோரி, த.வெ.க. துணைப் பொதுச்செயலாளர் நிர்மல்குமார் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் பேரணி, பொதுக்கூட்டங்களுக்கு அவர்கள் விரும்பிய இடத்தில் காவல்துறை அனுமதி வழங்குவதாகவும், அதேபோல த.வெ.க.-வுக்கு பாரபட்சமின்றி அனுமதி வழங்கக் கோரியும் கடந்த

(கடைசி பக்கம் பார்க்க)

**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE ↓ 320.25 பாயிண்ட் 83,013.96

NSE ↓ 93.35 பாயிண்ட் 25,423.60



**தங்கம்**
1 சவரன் ₹81,760
1 கிராம் ₹10,220



**வெள்ளி**
1 கிலோ ₹141,000
1 கிராம் ₹141.00

**டாலர்** ₹88.20

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# சட்டவிரோத போதைப்பொருள் நாடுகளின் பட்டியலில் இந்தியா

## அதிபர் ட்ரம்ப் அறிவிப்பால் பரபரப்பு

**வாஷிங்டன், செப். 19-**

போதை பொருள் நாடுகளில் பட்டியலில் இந்தியாவா? என்று அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்பால் பரபரப்பு ஏற்பட்டது.



சட்ட விரோதமாக போதைப்பொருள் தயாரித்தல் மற்றும் கடத்தலில் ஈடுபடும் நாடுகள் பட்டியலை அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டார். 23 நாடுகளை கொண்ட அந்த பட்டியலில் ஆப்கானிஸ்தான், சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியாவின் பெயரையும் அவர் சேர்த்து இருந்தார். போதைப்பொருள் கடத்தல் மற்றும் அவற்றின் தயாரிப்பில் முக்கியமாக ஈடுபட்டுள்ள இந்த நாடுகளின் செயலால் அமெரிக்கா மற்றும் அதன் குடிமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதாக அந்த பட்டியலில் ட்ரம்ப் குறிப்பிட்டு உள்ளார். இந்த குற்றச்செயல் தடுப்பில் தவறிவிட்டதாக ஆப்கானிஸ்தான், பொலிவியா, மியான்மர் உள்ளிட்ட 5 நாடுகளை குறிப்பிட்டு இருந்த அவர், போதைப்பொருள் தடுப்புக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்குமாறும் அந்த நாடுகளை கேட்டுக் கொண்டு உள்ளார். போதைப் பொருள் தயாரிப்பு மற்றும் கடத்தல் நாடுகளின் பட்டியலில் இந்தியாவை சேர்த்த டிரம்பின் நடவடிக்கை இந்தியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# புர்ஜ் கலிபாவில் ஒளிர்ந்த பிரதமர் மோடி படம்

**துபாய், செப். 19-**

பிரதமர் மோடியை கவுரவிக்கும் விதமாக, அவரது புகைப்படத்தை ஒளிரச் செய்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.




பிரதமர் மோடி நேற்று முன்தினம் தனது 75-வது வயதை நிறைவு செய்தார். இவரது பிறந்த நாளையொட்டி உள்நாட்டு தலைவர்கள், உலக தலைவர்கள் என பலர் வாழ்த்து தெரிவித்தனர்.ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். இங்கிலாந்து மன்னர் சார்லஸ், மோடிக்கு மரக்கன்றை பரிசாக அனுப்பியுள்ளார்.

மேலும் இங்கிலாந்து முன்னாள் பிரதமர் ரிஷி சுனக், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானிஸ், டொமினிகா பிரதமர் ரூஸ்வெல்ட் ஸ்கெர்ரிட், பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே, இலங்கை ஜனாதிபதி திசநாயக, மைக்ரோ சாப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ் உள்ளிட்ட பலர் பிரதமர் மோடிக்கு தொலைபேசியிலும், வீடியோ மற்றும் எக்ஸ் தள பதிவு வாயிலாகவும் வாழ்த்து தெரிவித்தனர்.இதுபோல மேலும் பல்வேறு தலைவர்கள் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்து உள்ளனர்.

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு, துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், உள்துறை மந்திரி அமித்ஷா மத்திய மந்திரிகள் ராஜ்நாத் சிங், ஜே.பி.நட்டா, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இதேபோல் தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்டோர் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இந்தநிலையில், துபாயில் உள்ள உலகின் மிக உயர்ந்த கட்டடமாக கருதப்படும் புர்ஜ் கலிபாவில் பிரதமர் நரேந்திர மோடியை கவுரவிக்கும் விதமாக, அவரது புகைப்படத்தை ஒளிரச் செய்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்தியா - ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான தூதரக ரீதியிலான உறவு மேம்பட்டு வரும் சூழலில், பிரதமர் மோடியை அந்நாட்டு அரசு கௌரவித்துள்ளது. முன்னதாக, ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் பகிர்ந்த வாழ்த்து செய்தியில், பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்.

நல்ல ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழவும், இந்தியாவின் முன்னேற்றத்தையும் மக்களின் செழிப்பையும் முன்னேற்றுவதில் தொடர்ந்து வெற்றி பெறவும் வாழ்த்துகிறேன் எனக் குறிப்பிட்டிருந்தார்.

# காசாவுக்குள் முன்னேறும் இஸ்ரேல் படை

**ஜெருசலேம், செப். 19-**

காசா நகருக்குள் இஸ்ரேல் படையினர் தொடர்ந்து முன்னேறி வருவதால் அங்கும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 50 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளை, பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காசா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களாக காசா மீது தரைவழி தாக்குதலையும் இஸ்ரேல் தீவிரப்படுத்தி உள்ளது. இதனால் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் அங்குள்ள பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் வெளியேறி வருகிறார்கள். வாகனங்களிலும், கால்நடையாகவும் மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில், இஸ்ரேலின் படை துருப்புகள், காசாவுக்குள் தீவிரமாக ஊடுருவி முன்னேறிச் செல்லத் தொடங்கி உள்ளன.

தரைப்படைகள் காசாவில் நுழையும் முன்பு விமானப்படை மற்றும் பீரங்கி பிரிவுகள் காசாவை 150 முறைக்கு மேல் தாக்கியதாக இஸ்ரேலிய ராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது. இந்த தாக்குதலில் காசாவின் பல அடுக்குமாடி குடியிருப்புகள் தகர்க்கப்பட்டன. கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 16 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

## இனி 'ஐஸ்கிரீம்' கிடையாது:

# அதிபர் கிம் போட்ட உத்தரவால் குழப்பத்தில் வடகொரிய மக்கள்

**பியாங்யாங், செப். 19-**

அதிபர் கிம் போட்ட உத்தரவால் வடகொரிய மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.



வடகொரியாவில் பிற மொழிகளின் ஆதிக்கத்தை குறைக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, மக்களிடம் புழக்கத்தில் இருக்கும் வேற்றுமொழி வார்த்தைகளை நீக்கிவிட்டு, அதற்கு இணையான, அரசால் அங்கீகரிக்கப்பட்ட சொற்களை பயன்பாட்டிற்கு கொண்டு வர வடகொரிய அரசு திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில், வடகொரியாவில் இனி 'ஐஸ்கிரீம்' என்ற வார்த்தையை பயன்படுத்தக் கூடாது என அந்நாட்டு அதிபர் கிம் உத்தரவிட்டுள்ளார். அதற்கு பதிலாக 'எசெக்கிமோ' அல்லது 'எரெம்போசங்கி' என்ற வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு வடகொரிய மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் குறிப்பாக சுற்றுலா வழிகாட்டிகள் இந்த உத்தரவை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 'எசுக்கிமோ' என்ற வார்த்தையானது அலாஸ்கா, சைபீரியா, கிரீன்லாந்து உள்ளிட்ட பிரதேசங்களில் வாழும் பூர்வக்குடி மக்களை குறிக்கும் 'எஸ்கிமோ' என்ற வார்த்தையில் இருந்து உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதே போல், 'ஹாம்பர்கர்' என்ற உணவுப்பொருளின் பெயரை 'டாஜின்-காகி கியோபாங்' என்று வடகொரிய அரசு மாற்றியுள்ளது.

# சவுதி அரேபியா –பாகிஸ்தான் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம்

**புதுடெல்லி, செப். 19-**

பாகிஸ்தான் - சவுதி பாதுகாப்பு ஒப்பந்தத்தின் தாக்கம் குறித்து ஆய்வு செய்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே நீண்டகாலமாக மோதல் போக்கு இருந்து வருகிறது. இந்நிலையில், பாகிஸ்தான் - சவுதி அரேபியா நாடுகளுக்கு இடையே மிக முக்கியமான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. இது இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

அதாவது, இந்த ஒப்பந்தத்தின் மூலம் பாகிஸ்தான் மீதான எந்தவொரு தாக்குதலும் சவுதி அரேபியா மீதான தாக்குதலாக எடுத்துக் கொள்ளப்படும். அதேபோல் சவுதி அரேபியா மீதான எந்தவொரு தாக்குதலும் பாகிஸ்தான் மீதான தாக்குதலாக எடுத்து கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தம் தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "சவுதி அரேபியா - பாகிஸ்தான் இடையே முக்கிய பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானதாக செய்திகள் வந்துள்ளன. அதை நாங்களும் பார்த்தோம். இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக இந்த ஒப்பந்தத்தை முறைப்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வந்தது.

இந்த ஒப்பந்தத்தால் நமது நாட்டின் பாதுகாப்புக்கும், பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மைக்கும் எவ்வாறு தாக்கம் ஏற்படும் என்பதை ஆய்வு செய்வோம். நாட்டின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதிலும், அனைத்து களங்களிலும் விரிவான தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதிலும் மத்திய அரசு உறுதியாக உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

# மத்தியபிரதேசத்தில் பழங்குடியின பெண் கண்டெடுத்த உயர்தர வைரம்

**போபால், செப். 19-**

மத்தியபிரதேசத்தில் பழங்குடியின பெண் கண்டெடுத்த உயர்தர வைரம் லட்சக்கனக்கில் ஏலம் போகும் என தகவல்.


மத்திய பிரதேச மாநிலம் பன்னா மாவட்டத்தில் வைரச் சுரங்கம் உள்ளது. இந்த சுரங்கத்தின் குறிப்பிட்ட பகுதியை ராஜ்பூரில் வசிக்கும் வினிதா கோண்ட் என்ற பழங்குடியின பெண் மற்றும் சிலர் குத்தகைக்கு எடுத்து வைரம் தேடி வந்தனர்.

அப்போது வினிதா 3 வைரங்களை கண்டெடுத்தார். அவை 1.48 காரட் மற்றும் 20 சென்ட் மற்றும் 7 சென்ட் எடை கொண்டது.

அந்த வைரங்கள் ஏலம் விடப்படும். அவை பல லட்சத்துக்கு ஏலம் போகும் என தெரிகிறது. வைர வியாபாரி அனுபம்சிங் இதுகுறித்து கூறும்போது, 'இந்த வைரங்களில் ஒன்று உயர்தரம் மிக்கது. மற்ற இரண்டும் குறைந்த தரம் கொண்டவை' என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**19-09-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** முயற்சிகள் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் ஏற்படும். தாயின் உடல் நிலையில் சிறப்பு கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதிருந்தால் வெற்றி உங்கள் பக்கம்.

**ரிஷபம்:-** வியாபார முன்னேற்றத்திற்கான புது ஆலோசனைகளும் நல்ல வாய்ப்புகளும் தேடிவரும். பலவகையிலும் பணவரவு கூடும். புதிய நண்பர்கள், உடன் பிறப்புக்கள் உதவி உண்டு.

**மிதுனம்:-** வரவுக்கு மிஞ்சிய, சமாளிக்க முடியாத அளவுக்கு செலவுகள் ஏற்படும். கருத்து வேறுபாடுகளை தவிர்க்க, பிறர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காதே அதுவே நல்லது.

**கடகம்:-** தொழிலில் தன்னம்பிக்கையும், மனதில் மகிழ்ச்சியும் கூடும். வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை எய்தி, வருமானத்தைக் கூட்ட முயல்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**சிம்மம்:-** பெண்களால் செலவுகள் ஏற்படும். நான்கு சுவற்றுக்குள் இருக்க வேண்டிய குடும்ப விவகாரங்கள் எதையும் பொது இடத்தில் பேசாதீர்கள். புதிய பொருட்களை அவசியப்பட்டால் மட்டும் வாங்குங்கள்.

**கன்னி:-** வீட்டில் மகிழ்ச்சி நிலவும். விழா கொண்டாட்டங்களில் கலந்து மகிழ்வீர்கள். வியாபாரம் அதிகரித்து இலாபத்தை புதிய சேமிப்பு களில் முதலீடு செய்வீர்கள்.

**துலாம்:-** மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் அரசு அதிகாரிகளுக்கு தன்னம்பிக்கை கூடும். ஆரோக்கியம் மேம்பட்டு தேக திடம் அதிகரிக்கும். எதிர்பாராத முன்னேற்றங்களால் வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் உள்ளத்தில் சந்தோஷம் பொங்கும். காதல் மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும். வருமானம் பெருகும்.

**தனுசு:-** முறையற்ற வழிகளில் சென்றால் கஷ்டப்பட நேரும். மனைவியின் வாய் துடுக்கு மூலம் உறவுகளுக்குள் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் ஆதாயம் அடைவீர்கள்.

**மகரம்:-** குடும்பத்துடன் செல்லும் குறுகிய தூரப் பயணங்கள் மகிழ்ச்சி தரும். சொகுசான புதிய வாகன யோகம் ஏற்படும். தொழிலில் ஏற்படும் மாற்றங்களால் வருமானம் கூடும்.

**கும்பம்:-** எல்லா வளமும் பெருகும். தொழில் வளர்ச்சிக்கு வரும் வாய்ப்புகளை நழுவ விடாதீர்கள். உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும்.

**மீனம்:-** பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். பிறர் குறை கூறாத வண்ணம் தங்கள் மரியாதையை காத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

# வரும் 23-ம் தேதி குமரி பகவதி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா தொடக்கம்

**கன்னியாகுமரி,செப். 19-**

பகவதி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா வருகிற 23-ம் தேதி தொடங்குகிறது.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் 10 நாட்கள் நவராத்திரி விழா நடைபெறுவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டுக்கான நவராத்திரி விழா வருகிற 23-ந்தேதி தொடங்குகிறது. அடுத்த மாதம் (அக்டோபர்) 2-ந் தேதி வரை 10 நாட்கள் தொடர்ந்து நடக்கிறது. இதையொட்டி 23-ந் தேதி காலை 7.45 மணிக்கு மேல் 8.45 மணிக்குள் அம்மன் கொலு மண்டபத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடக்கிறது.

தொடர்ந்து திருவிழா நாட்களில் தினமும் அதிகாலை 5 மணி மற்றும் காலை 10 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், 11 மணிக்கு அம்மனுக்கு வைரக் கிரீடம், வைரக்கல் மூக்குத்தி, தங்க ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு சந்தன காப்பு அலங்காரத்துடன் பக்தர்களுக்கு அம்மன் அருள்பாலிக்கும் நிகழ்ச்சி, 11.30 மணிக்கு அலங்கார தீபாராதனை, பகல் 12 மணிக்கு அன்னதானம், மாலை 6 மணிக்கு ஆன்மிக நிகழ்ச்சி, இரவு 9 மணிக்கு அம்மன் வாகனத்தில் எழுந்தருளி கோவிலை சுற்றி 3 முறை பவனி வருதல் நடைபெறுகிறது.

விழாவில் 10-ம் திருவிழாவான அடுத்த மாதம் 2-ந் தேதி காலை 7.30 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் அலங்கார மண்டபத்தில் அம்மன் வெள்ளி குதிரை வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் நிகழ்ச்சி, பகல் 12 மணிக்கு அம்மன் அலங்கார மண்டபத்தில் இருந்து வெள்ளிக்குதிரை வாகனத்தில் சிறப்பு அலங்காரத்துடன் மகாதானபுரம் நோக்கி பரிவேட்டைக்கு ஊர்வலமாக புறப்பட்டு செல்லுதல் நடக்கிறது. இதில் யானை ஊர்வலம், குதிரை ஊர்வலம், முத்துக்குடை ஊர்வலம், கோலாட்டம் மற்றும் கேரள புகழ் தெய்யம் ஆட்டம் ஆகியன நடைபெறும்.

மகாதானபுரத்தில் பரிவேட்டை நடக்கிறது. பின்னர் அம்மன் வீதி உலா வருதல், தொடர்ந்து அம்மன் வெள்ளி பல்லக்கில் கன்னியாகுமரிக்கு புறப்பட்டு செல்லும் நிகழ்ச்சி நடக்கிறது. அங்கு நள்ளிரவு முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு, பின்னர் வருடத்தில் 5 முக்கிய விசேஷ நாட்களில் மட்டும் திறக்கப்படும் கோவிலின் கிழக்கு வாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக அம்மன் கோவிலுக்குள் பிரவேசிக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. திருவிழாவுக்கான ஏற்பாடுகளை குமரி மாவட்ட திருக்கோவில்கள் நிர்வாகம் செய்து வருகிறது.

மேலும் பரிவேட்டை நிகழ்ச்சிகளை கோவில் நிர்வாகத்தினர் மற்றும் கன்னியாகுமரி பகவதி அம்மன் பக்தர்கள் சங்கம் இணைந்து செய்து வருகிறார்கள்.

# தலைவர்தான் கூட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும்

## த.வெ.க.வுக்கு ஐகோர்ட் அறிவுறுத்தல்

**சென்னை, செப். 19-**

த.வெ.க. பரப்புரைக்கு அனுமதி வழங்கக்கோரி வழக்கில் தலைவராக இருப்பவர்தான் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஐகோர்ட் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், தமிழக வெற்றிக் கழகத்தின் துணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், "த.வெ.க. தலைவர் விஜய் கடந்த 13-ம் தேதி திருச்சியில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார். அதைத் தொடர்ந்து வருகிற 20-ந் தேதி முதல் டிசம்பர் 20-ந் தேதி வரை மாநிலம் முழுவதும் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். திருச்சியில் நடந்த பிரசாரத்தின் போது போலீஸ் தரப்பில் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

அவை அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டன. தமிழ்நாட்டில் ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள், ரோடு ஷோ போன்றவைகளுக்கு கடுமையான நிபந்தனைகள் விதிப்பது இல்லை. ஆனால், எங்களது கட்சிக்கு மட்டும் போலீசார் கடுமையான நிபந்தனைகள் விதிக்கின்றனர். எனவே, விஜய் மேற்கொள்ளும் பிரசாரத்துக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் மனுக்களை பாரபட்சமின்றி பரிசீலித்து அனுமதி வழங்க மாநிலம் முழுவதும் உள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி டி.ஜி.பி.க்கு ஆணையிட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது . விசாரணையின்போது , நிபந்தனைகள் அனைத்துக் கட்சிகளுக்கும் விதிக்கப்படுவதுதானே? தலைவராக இருக்கும் நீங்கள்தான் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். தொண்டர்கள் உயரமான இடங்களில் ஏறி நின்று, ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் யார் பொறுப்பு?. யாரும் சட்டத்துக்கு மேலானவர்கள் அல்ல. பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்துக்கு உட்பட்டு நடத்த வேண்டும். என ஐகோர்ட் தெரிவித்தது.

## ராஜஸ்தான்: காதலனுக்கு பிடிக்காததால்

# தனது குழந்தையை ஏரியில் வீசி கொன்ற கொடூர தாய்..!

**ஜெய்ப்பூர், செப். 19-**

ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் உள்ள வைஷாலி நகர் பகுதியில் காதலனுக்கு பிடிக்காததால் தனது குழந்தையை தாய் ஒருவர் ஏரியில் வீசி கொன்ற கொடூர சம்பவம் அரங்கேறியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் உள்ள வைஷாலி நகர் பகுதியில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கான்ஸ்டபிள் கோவிந்த் சர்மா என்பவர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த வழியாக ஒரு ஆணும், பெண்ணும் நடந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்து அவர்களை நிறுத்தி விசாரித்தார். அந்த பெண், தன்னுடைய குழந்தை காணாமல் போய்விட்டதாக கூறியுள்ளார்.

இதையடுத்து போலீசார் அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை சோதனை செய்தனர். இதற்கிடையில், அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அந்த பெண்ணின் பெயர் பிரியா என்பதும், அவருடன் இருந்த ஆணின் பெயர் அல்கேஷ் என்பதும், இருவரும் லிவ்-இன் முறையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் தெரியவந்தது.

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியை சேர்ந்த பிரியாவுக்கு ஏற்கனவே திருமணமாகி 3 வயதில் ஒரு குழந்தை உள்ள நிலையில், குடும்ப பிரச்சினை காரணமாக அவர் தனது கணவரை விட்டு பிரிந்து அஜ்மீரில் தனியாக வசித்து வந்துள்ளார். அங்குள்ள ஒரு ஓட்டலில் வரவேற்பாளராக பணியாற்றி வந்த பிரியாவுக்கு, அதே ஓட்டலில் வேலை செய்து வரும் அல்கேஷுடன் பழக்கம் ஏற்பட்டு, பின்னர் இருவரும் காதலர்களாக மாறியுள்ளனர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

இதனிடையே, போலீசார் சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்தபோது, பிரியா தனது 3 வயது பெண் குழந்தையை கையில் வைத்துக் கொண்டு நள்ளிரவு நேரத்தில் ஆனா சாகர் ஏரி அருகே நடந்து சென்ற காட்சிகள் பதிவாகி இருந்தன. பின்னர் சுமார் 1.30 மணியளவில் அவர் மட்டும் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அவர் கையில் குழந்தை இல்லை. இதனால் போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இந்த நிலையில், அடுத்த நாள் காலை குழந்தையின் இறந்த உடல் ஏரியில் கண்டெடுக்கப்பட்டது. இதையடுத்து பிரியாவிடம் போலீசார் நடத்திய கிடுக்குப்பிடி விசாரணையில், அவர் குழந்தையை ஏரியில் தூக்கி வீசி கொலை செய்ததை ஒப்புக் கொண்டார்.

# விஜய்யை கடுமையாக விமர்சனம் செய்வது ஏன்? - சீமான் விளக்கம்

**சென்னை, செப். 19-**

விஜய்யை கடுமையாக விமர்சனம் செய்வது ஏன்? என்று சீமான் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னை கிண்டியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது விஜய்யை விமர்சிப்பது ஏன்? என்பது குறித்த கேள்விக்கு அவர் பதிலளித்து பேசியதாவது;

திரைத்துறையில் உச்சத்தை விட்டுவிட்டு வந்துள்ளேன் என்று கூறுகிறீர்கள். உச்சத்தை விட்டுவிட்டு வந்துள்ளேன் என்று கூறினால், உங்களை யார் வரச்சொன்னது என்ற கேள்வி வருகிறது. அரசியலுக்கு வந்தால் சேவை செய்ய வேண்டுமே தவிர, தற்பெருமை பேசக்கூடாது. விஜய் மற்றவர்களுக்கு வேண்டுமானால் தலைவர். விஜய் எனக்கு தம்பி. இப்படி சொல்லாதே.. என்று கூற வேண்டிய கடமையும், பொறுப்பும் எனக்கு உள்ளது. இந்த கோட்பாட்டுக்காகத்தான் எம்.ஜி.ஆர், அண்ணாவை வைத்துள்ளோம் என்று கூற அவரால் முடியுமா? நான் தெளிவாக கூறுகிறேன். நான் ஆள் மாற்றம், ஆட்சி மாற்றத்துக்கு வரவில்லை. அரசியலமைப்பு அடிப்படை மாற்றத்திற்கு வந்துள்ளேன். இங்கு தேர்தல் அரசியல், கட்சி அரசியல் உள்ளது. மக்கள் அரசியல் இல்லை என்று நான் கூறுகிறேன். இங்கு செய்தி அரசியல், விளம்பர அரசியல் உள்ளது. சேவை, செயல் அரசியலை நோக்கி நான் செல்கிறேன். அப்படி தனது நிலைப்பாட்டை எடுத்துச்சொல்ல வேண்டும். தவெக இளைஞர்கள் இன்னும் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் பக்குவம் அடைய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### புதுச்சேரி சட்டசபை தேர்தல்:
# மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகளுடன் கமல்ஹாசன் முக்கிய ஆலோசனை

**சென்னை, செப். 19-**

மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகளுடன் கமல்ஹாசன் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

மக்கள் நீதி மய்யம் சார்பில் தமிழ்நாடு, புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான ஆலோசனை கூட்டம் நேற்று முதல் 21-ந் தேதி வரை 4 நாட்கள் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை டி.என்.ராஜரத்தினம் கலை அரங்கத்தில் நடைபெறுகிறது. நேற்று காலையில் சென்னை, மாலையில் காஞ்சிபுர மாவட்ட நிர்வாகிகள் முதல் கிளை நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) காலை கோவை, மாலை மதுரை, நாளை காலை நெல்லை, மாலை திருச்சி, 21-ந் தேதி காலையில் விழுப்புரம், மாலையில் சேலம் மற்றும் புதுச்சேரி மண்டலங்களை சேர்ந்த மாநில நிர்வாகிகள் முதல் கிளை நிர்வாகிகள் வரை அனைவரையும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. சந்திக்கிறார்.

அப்போது 'மக்கள் நீதி மய்யத்துக்கு மக்களிடம் செல்வாக்கு எப்படி இருக்கிறது?, வர உள்ள சட்டசபை தேர்தலில் போட்டியிட எத்தனை தொகுதிகளை கேட்கலாம்? என்பது உள்பட பல்வேறு கேள்விகளை கேட்க உள்ளார். இதன் அடிப்படையில் கட்சியினர் தெரிவிக்கும் கருத்துகள் அடிப்படையில் சட்டசபை தேர்தலுக்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று கட்சியினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை டி.என்.ராஜரத்தினம் கலை அரங்கத்தில் மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகளுடன் கமல்ஹாசன் ஆலோசனை நடத்தி வருகிறார். கட்சியின் அடிப்படை கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம்? என கமல்ஹாசன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

சட்டசபை தேர்தலுக்கான முக்கிய முடிவுகள் இந்த கூட்டத்தில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பனை மரம் வெட்ட மாவட்ட கலெக்டர் அனுமதி கட்டாயம்
### தமிழ்நாடு அரசாணை வெளியீடு

**சென்னை, செப். 19-**

பனை மரம் வெட்ட கலெக்டர் அனுமதி கட்டாயம் என அரசாணை வெளியிட்டுள்ளது.

பனை மரங்களை பாதுகாப்பது என்பது சுற்றுச்சூழல் சமநிலைக்கும் பொருளாதாரத்திற்கும் பாரம்பரியத்திற்கும் முக்கியமானது. பனைமரங்கள் வறட்சியை தாங்கி வலுவாக நிற்பதுடன், பனை வெள்ளம், பாய் உள்ளிட்ட பல பொருட்களை தந்து, விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் அளித்து வருகிறது. புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் போது நிலச்சரிவை தடுப்பதில் பனை மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்நிலையில், பனை மரத்தை வெட்ட மாவட்ட கலெக்டர் அனுமதி கட்டாயம் என தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அரசாணையில்,

பனை மரத்தை வெட்டி விற்கவும், செங்கல் சூளைக்கு பயன்படுத்துவதை தடுக்கும் விதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பனை மரம் வெட்ட கலெக்டர் அனுமதி கட்டாயம், தவிர்க்க இயலாத சூழலில் பனை மரங்களை வெட்ட நேரிட்டால் கலெக்டர் அனுமதி பெறுவது கட்டாயம் பனை மரங்களை வெட்ட 'உழவர் செயலி'யில் விண்ணப்பிக்க வேண்டும். வெட்டப்பட்ட பனை மரங்களை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும்போது, அனுமதி கடிதம் காட்டாயம், நீர்நிலைகளின் காவலன் என்று அழைக்கப்படும் பனை மரங்களை பாதுகாக்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனைமரங்களை பாதுகாக்கும் நோக்கில், சட்டசபையில் 110 விதியின் கீழ் பனை மரத்தை வெட்டக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பனை மரம் வெட்ட வேண்டும் என்றால் கலெக்டர் அனுமதி பெற்று தான் வெட்ட வேண்டும். மேலும் பனை மரத்தை வெட்டினால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று மதுரை ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

### புதுச்சேரி சட்டசபையில் இருந்து
# தி.மு.க., காங்., உறுப்பினர்கள் குண்டு கட்டாக வெளியேற்றம்

**புதுச்சேரி, செப். 19-**

புதுச்சேரி சட்டசபையில் ஏற்பட்ட சலசலப்பு காரணமாக தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்.



புதுச்சேரி சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த மார்ச் மாதம் 10-ந் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. இதைத்தொடர்ந்து முதல்-அமைச்சர் ரங்கசாமி மார்ச் 12-ந் தேதி ரூ.13 ஆயிரத்து 600 கோடிக்கான பட்ஜெட் தாக்கல் செய்தார். பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச் 27-ந் தேதி வரை (13 நாட்கள்) மாநில அந்தஸ்து வலியுறுத்தும் அரசு தீர்மானத்தை நிறைவேற்றி காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

சட்டசபையை 6 மாதங்களுக்கு ஒருமுறை கூட்ட வேண்டும் என்பது விதி. அதன்படி இந்த மாதம் (செப்டம்பர்) சட்டசபை கூட்டப்பட வேண்டும். அதன்படி பரபரப்பான அரசியல் சூழலில் புதுச்சேரி சட்டசபையின் 6-வது கூட்டத்தொடரின் 2-வது பகுதி நேற்று காலை 9.30 மணிக்கு கூடியது. சபையை சபாநாயகர் செல்வம் திருக்குறள் வாசித்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து ஜி.எஸ்.டி. திருத்த மசோதா, எளிய முறையில் தொழில் தொடங்க அனுமதி குறித்து மசோதா தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில்,

புதுச்சேரி சட்டசபையில் இருந்து தி.மு.க. காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் குண்டுக்கட்டாக வெளியேற்றம் செய்யப்பட்டனர். குடிநீரில் கழிவுநீர் கலந்தது குறித்து அவையில் விவாதிக்க தி.மு.க., காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கோரிக்கையை வலியுறுத்தி அவையின் முழக்கமிட்டு சபாநாயகரை சூழ்ந்து கொண்டனர். சபாநாயகர் அறிவுறுத்தியும் கேட்காத நிலையில் எதிர்க்கட்சி தலைவர் சிவா உள்ளிட்டோர் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டனர்.

### உத்தரகாண்டில் நிலச்சரிவு:
# வீடுகள் இடிந்து விழுந்ததில் 10 பேர் மாயம்

**ராஞ்சி, செப். 19-**

உத்தரகாண்டில் நிலச்சரிவில் வீடுகள் இடிந்து விழுந்ததில் 10 பேர் மாயமாகி உள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் மேகவெடிப்பால் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. நேற்றை முன் தினம் டேராடூனில் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன. இதன் காரணமாக தம்சா ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆற்றங் கரையோரத்தில் உள்ள தப்கேஷ்வர் மகாதேவ் கோயிலைச் சுற்றி வெள்ளம் சூழ்ந்தது. இதனால் 15க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்நிலையில் .சாமோலி மாவட்டத்தில் மீண்டும் மேகவெடிப்பு ஏற்பட்டது. இதனால் காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது. 6 வீடுகள் இடிந்து விழுந்தன. நிலச்சரிவு ஏற்பட்டபோது ஏழு பேர் வீடுகளுக்குள் இருந்தனர், அவர்களில் இருவர் உயிருடன் மீட்கப்பட்டனர், 10 பேர் இன்னும் காணவில்லை. சம்பவ இடத்திற்கு பேரிடர் மீட்பு படையினர் விரைந்துள்ளனர்.

அவர்கள் மாயமானவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் கயிறு கட்டி மீட்டனர். இது குறித்து உத்தராகண்ட் மாநில முதல்-மந்திரி புஷ்கர் சிங் தாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சாமோலி மாவட்டத்தின் நந்தநகர் காட் பகுதியில் பெய்த கனமழையால் அருகிலுள்ள வீடுகள் சேதமடைந்ததாக வருத்தமளிக்கும் செய்தி கிடைத்துள்ளது.

மீட்பு படையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். நான் அதிகாரிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன், மேலும் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறேன். அனைவரின் பாதுகாப்பிற்காகவும் நான் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ராகுல் காந்தியின் வாக்கு திருட்டு புகார் எதற்காக?
### அமித்ஷா பேச்சால் பரபரப்பு

**பாட்னா, செப். 19-**

வங்காளதேசத்தில் இருந்து வந்த ஊடுருவல்காரர்களை பாதுகாப்பதற்காகதான் ராகுல் காந்தி வாக்கு திருட்டு புகாரை தெரிவித்துள்ளார் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் சட்டசபை தேர்தல் வருகிற அக்டோபர் அல்லது நவம்பரில் நடைபெற கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை முன்னிட்டு கட்சிகள் தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில், ரோத்தாஸ் நகருக்கு வருகை தந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பா.ஜ.க. தொண்டர்கள் மத்தியில் பேசினார்.

அப்போது அவர், காங்கிரஸ் கட்சியினர் ஒவ்வொரு முறையும் பொய்யான கதைகளை பரப்பி வருகின்றனர். ராகுல் காந்தி யாத்திரை ஒன்றை மேற்கொண்டார். அது வாக்கு திருட்டுக்கானது அல்ல.

நல்ல கல்வி, வேலைவாய்ப்பு, மின்சாரம், சாலைகளுக்கானது அல்ல. அவருடைய சுற்றுப்பயணத்திற்கான விசயம் என்னவென்றால், வங்காளதேசத்தில் இருந்து வந்த ஊடுருவல்காரர்களை பாதுகாப்பதற்காகதான் என அமித்ஷா பேசியுள்ளார்.

உங்களில் யாராவது வாக்குகளை இழந்துள்ளீர்களா? என கேள்வி எழுப்பிய அவர், இது, ஊடுருவல்காரர்களை பாதுகாப்பதற்கான ராகுல் காந்தியின் யாத்திரை என கூறியுள்ளார்.

ஊடுருவல்காரர்களுக்கு வாக்களிப்பதற்கோ அல்லது இலவச ரேசன் பொருட்களை பெறுவதற்கோ உரிமை உண்டா? அவர்களுக்கு வேலைவாய்ப்புகள், வீடுகள், ரூ.5 லட்சம் வரையிலான சிகிச்சை ஆகியவை கிடைக்க பெறுமா? நம்முடைய இளைஞர்களுக்கு பதிலாக, ராகுல் பாபாவும், அவர்களுடைய நிறுவனமும் வாக்கு வங்கி ஊடுருவல்காரர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி கொண்டிருக்கின்றனர் என பேசியுள்ளார்.

# ஜனவரியில் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு
### மதுரை ஐகோர்ட் கிளையில் தகவல்

**மதுரை, செப். 19-**

வருகிற 2026 ஜனவரியில் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு நடைபெறும் என நீதிமன்றத்தில் கோயில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு உள்பட்ட பகுதியில் புது மண்டபத்தில் இருந்த 100-க்கும் மேற்பட்ட கடைகள் அகற்றப்பட்டு பூட்டப்பட்டது. இந்த புது மண்டபத்தைத் புதுப்பித்து மக்கள் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதிகள் முன்பு நேற்று இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, கோயில் நிர்வாகத் தரப்பு வழக்கறிஞர், "மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு 2026 ஜனவரி மாதம் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக புது மண்டபம் புதுப்பிப்பு பணிகள் முடிந்துவிடும். எனவே அதுவரை கால அவகாசம் தர வேண்டும்" என்று கூறினார். டிசம்பர் மாதம் இறுதிக்குள் புது மண்டபம் புதுப்பிக்கும் பணி முடிவடைந்துவிடுமா? என்பது குறித்து பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

### விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து:
# 3 பேர் மீது வழக்குப்பதிவு

**விருதுநகர், செப். 19-**

பட்டாசு ஆலையில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டு இதில் உரிமையாளர் உள்பட 3 பேர் மீது 4 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே கங்கர் செவல்பட்டி கிராமத்தில் மாரிமுத்து என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இங்கு ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை பட்டாசு தயாரிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராத விதமாக பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர், தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இதனிடையே, இந்த விபத்து சம்பவத்தில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும் 2 பேர் பலத்த காயமடைந்தனர். இந்த விபத்து தொடர்பாக ஆலையின் உரிமையாளர் உள்பட 3 பேர் மீது 4 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதில் பட்டாசு ஆலையின் மேலாளரை போலீசார் கைது செய்துள்ளனர். அதே சமயம், ஆலை உரிமையாளர் மற்றும் அவரது மகன் ஆகிய இருவரும் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# வயநாட்டில் பிரியங்கா காந்தி

**வயநாடு, செப். 19-**

வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளை பிரியங்கா காந்தி கேட்டறிந்தார்.

கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த மக்களவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி, தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். இதனால் வயநாடு தொகுதிக்கு கடந்தமாதம் (நவம்பர்) 13-ந்தேதி இடைத்தேர்தல் நடத்தப்பட்டது.


இதில் காங்கிரஸ் கட்சி சார்பில் ராகுல் காந்தியின் சகோதரி பிரியங்கா காந்தி போட்டியிட்டார். அவர் 6,22,338 வாக்குகள் பெற்று 4 லட்சத்துக்கு அதிகான வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். இந்நிலையில், கேரள மாநிலம், வயநாடு மக்களவை தொகுதியின் உறுப்பினரான பிரியங்கா காந்தி, அந்த தொகுதியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளார். இதன்படி வயநாட்டில் உள்ள நிலம்பூர் வனப்பகுதியில் வாழும் மக்களை நேரில் சந்தித்த மக்களவை உறுப்பினர் பிரியங்கா காந்தி, அவர்களின் பிரச்னைகளை கேட்டறிந்தார்.

அதன் ஒரு பகுதியாக, கொட்டியம்வயல் வனப் பகுதிக்குள் முன்மொழியப்பட்ட படிஞ்சரத்தாரா - பூழித்தோடு சாலை திட்டத்தை மாவட்ட கலெக்டர், மாவட்ட வன அலுவலருடன் இணைந்து பிரியங்கா காந்தி பார்வையிட்டார். தொடர்ந்து, நிலம்பூர் அருகேவுள்ள கருளை காடு வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

### தி.மு.க. முப்பெரும் விழாவில்
# பெரியார் விருது பெற்ற கனிமொழி, துரைமுருகனை சந்தித்து வாழ்த்து

**சென்னை, செப். 19-**

பெரியார் விருது பெற்ற கனிமொழி தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகனை சந்தித்து வாழ்த்து பெற்றுள்ளார்.



தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்த நாள், பெரியார் பிறந்த நாள் மற்றும் தி.மு.க. தொடங்கப்பட்ட நாள் ஆகிய முப்பெரும் விழா கரூர் கோடங்கிப்பட்டி பை-பாஸ் சாலை பகுதியில் நேற்று முன்தினம் நடந்தது. விழாவில் பங்கேற்பதற்காக தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் திறந்த வேனில் வந்தார். வழிநெடுகிலும் அவருக்கு பொதுமக்கள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

விழாவில் பெரியார், அண்ணா விருது உள்ளிட்ட விருதுகளுக்கு தேர்வானவர்களுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விருதுகளை வழங்கி கவுரவித்தார். தி.மு.க. துணை பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவருமான கனிமொழி எம்.பி.க்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொன்னாடை மற்றும் மலர்மாலை அணிவித்து பெரியார் விருதை வழங்கினார்.

இந்த விழாவுக்கு தி.மு.க. பொதுச்செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன் தலைமை தாங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், உடல்நலக்குறைவு காரணமாக அவர் விழாவில் பங்கேற்கவில்லை. இந்த நிகழ்ச்சியை அவர் வீட்டில் இருந்தபடி தொலைக்காட்சி நேரலையில் பார்த்துக் கொண்டிருப்பதாக விழாவில் பேசிய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

இந்த நிலையில் தி.மு.க. முப்பெரும் விழாவில் பெரியார் விருது பெற்ற கனிமொழி எம்.பி. தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகனை சந்தித்து வாழ்த்து பெற்றுள்ளார். சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள துரைமுருகன் இல்லத்தில் அவரை நேரில் சந்தித்து கனிமொழி வாழ்த்து பெற்றார். மேலும், அமைச்சர் துரைமுருகனிடம் அவரது உடல் நிலை குறித்து கனிமொழி எம்.பி. விசாரித்தார்.

# பீகாரில் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூ.1000
### முதல்வர் நிதிஷ்குமார் அறிவிப்பு

**பாட்னா, செப். 19-**

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்க பீகார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

பீகாரில் இந்த ஆண்டு இறுதிக்குள் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி அனைத்து கட்சிகளும் தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பித்து விட்டன. பிரதமர் மோடி கடந்த 5 மாதத்தில் 5 முறை பீகாருக்கு சென்று பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

பீகார் சட்டசபை தேர்தலில் நிதிஷ் குமார் தலைமையில் பாஜக கூட்டணி களம் காண்கிறது. ஏற்கனவே அங்கு அந்தக் கூட்டணி ஆட்சியில் இருப்பதால், மீண்டும் ஆட்சியைத் தக்க வைப்பதில் நிதீஷ் குமார் திட்டமிட்டு வருகிறார். இதே போல லாலு பிரசாத் யாதவ் தலைமையிலான ராஷ்டிரிய ஜனதா தளம் ஆட்சியைப் பிடிக்க காய் நகர்த்தி வருகிறது.

இந்த சூழ்நிலையில், வாக்காளர்களை கவரும் விதத்தில், பீகார் முதல்-மந்திரி நிதிஷ் குமார் கடந்த சில மாதங்களாகவே சில முக்கிய அறிவிப்புகளை ஒவ்வொன்றாக அறிவித்து வருகிறார். முதலில், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகையை 400 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாக அதிகரிப்பதாக அறிவித்தார். அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் மாணவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் கல்விக்கடன்கள் அனைத்துக்கும் வட்டி தள்ளுபடி செய்யப்படும். மாணவர்கள் கல்வி கடனை திருப்பிச் செலுத்துவதற்கான காலமும் அதிகரிக்கப்படும். அதன்படி, ரூ.2 லட்சம் வரை கல்விகடன் பெற்ற மாணவர்கள் அதனை திருப்பிச் செலுத்துவதற்கான காலம் இப்போது ஐந்து ஆண்டுகளாக இருக்கும் நிலையில் அது ஏழு ஆண்டுகளாக (84 மாததவணைகள்) நீட்டிக்கப்படும் என்று அறிவித்தார்.

இந்தநிலையில் நிதிஷ் குமார் எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது:, பீகாரில் வேலை வாய்ப்பற்ற 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு 2 ஆண்டுகள் வரை மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படும் என்று அதில் அறிவித்துள்ளார். இது பீகார் இளைஞர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

### திருப்பதி ஏழுமலையானை வழிபட
# டிசம்பர் மாத தரிசன டோக்கன்கள் வெளியீடு

**திருமலை, செப். 19-**

திருப்பதி ஏழுமலையானை வழிபட டிசம்பர் மாதத்துக்கான தரிசன டோக்கன்கள் வெளியிடப்பட்டது.

திருமலை-திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திருப்பதி ஏழுமலையானை டிசம்பர் மாதத்தில் வழிபட பல்வேறு தரிசன டோக்கன்கள், தங்கும் விடுதிகளில் அறைகள் ஒதுக்கீடு போன்றவை நேற்று (வியாழக்கிழமை) வெளியிடப்படுகிறது. ஆர்ஜித சேவை டிக்கெட்டுகளுக்கான டிசம்பர் மாத ஒதுக்கீடு நேற்று திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஆர்ஜித சேவை டிக்கெட்டுகளுக்கான 'எலக்ட்ரானிக் டிப்' (குலுக்கல்) பதிவு 20-ந் தேதி காலை 10 மணி வரை செய்யலாம். அங்கப்பிரதட்சண டோக்கன்களும் இந்த மாதம் முதல் ஆன்லைனில் 'எலக்ட்ரானிக் டிப்' மூலம் வழங்கப்படுகின்றன. இந்த டிக்கெட்டுகளை பெற்றவர்கள் 20 முதல் 22-ந் தேதி மதியம் 12 மணி வரை அதற்கான தொகையை செலுத்தினால் 'லக்கி டிப்'பில் டிக்கெட்டுகள் வழங்கப்படும்.

கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீபாலங்கார சேவை உள்ளிட்ட ஆர்ஜித சேவை டிக்கெட்டுகள் 22-ந் தேதி காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படுகிறது. உற்சவ சேவைகள் மற்றும் அவற்றுக்கான தரிசன டோக்கன் ஒதுக்கீடு 22-ந் தேதி மதியம் 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படுகிறது. பக்தர்கள் ஆன்லைனில் பதிவு செய்து சாமி தரிசனம் செய்யலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### சட்டவிரோத பண பரிமாற்ற புகார்:
# சென்னையில் 5-க்கும் மேற்பட்ட இடங்களில் அதிரடி சோதனை
### அமலாக்கத்துறை திடீர் நடவடிக்கை

**சென்னை, செப். 19-**


சட்டவிரோத பண பரிமாற்றம் தொடர்பாக சென்னையில் துப்பாக்கி ஏந்திய சி.ஆர்.பி.எப். வீரர்கள் பாதுகாப்புடன் 5-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று காலை முதல் சோதனை மேற்கொண்டனர்.

சென்னை சைதாப்பேட்டை, புரசைவாக்கம் உட்பட ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் இன்று காலை முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீ நகர் காலனியில் வசித்து வருபவர் தொழிலதிபர். இவர் கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளராக இருந்து வருகிறார். இவரது வீட்டில் துப்பாக்கி ஏந்திய சி.ஆர்.பி.எப். வீரர்கள் பாதுகாப்புடன் அமலாக்கத் துறை அதிகாரிகள் காலை முதல் அதிரடியாக சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேபோல் சென்னை புரசைவாக்கம் பகுதியில் உள்ள ஒருவர் இல்லத்திலும் அமலாக்க துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். இவர் மொத்த தங்க நகை வியாபாரியாக இருக்கும் நிலையில் சவுகார்பேட்டை பகுதியில் நகை வியாபாரம் செய்து வருகிறார். மேலும் இவருக்கு தொடர்புடைய சில இடங்களிலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.


சட்டவிரோத பண பரிமாற்றம் நடைபெற்றதாக வந்த குற்றச்சாட்டின் அடிப்படையிலும், புகாரின் பேரிலும் சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக அமலாக்கத் துறை அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. சென்னையில் காலை முதல், தொழிலதிபர் மற்றும் நகை வியாபாரிக்கு தொடர்புடைய 5-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடியாக சோதனை மேற்கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




டெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை எடப்பாடி பழனிசாமி வெளிப்படையாகவே சந்தித்தார். இதில் மறைக்க எதுவும் இல்லை. எடப்பாடி பழனிசாமி முகத்தை மூடவில்லை. ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. ஆட்சியை பாதுகாத்தது பா.ஜ.க.தான் என்று பழனிசாமி கூறியது வரவேற்கத்தக்கது.

- அண்ணாமலை




தி.மு.க. கூட்டணியில் சேர்ந்துவிட்டேன் என சிலர் எங்கள் மீது விமர்சனங்கள் வைக்கிறார்கள். நீதிக்கட்சியில் இருந்து வந்தது தி.மு.க., அதே போல மக்கள் நீதி மய்யம் கட்சி பெயரிலும் நீதி உள்ளது. ஆசியாவிலேயே மையவாதத்தை பின்பற்றும் ஒரே கட்சி மக்கள் நீதி மய்யம் தான், நாட்டை இடது, வலது என பிரிப்பதை அனுமதிக்க கூடாது.

- கமல்ஹாசன் எம்.பி.



மக்கள் சாதி வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் சமமாக கருதுகிற வகையில், வழிபாட்டுத் தலங்களில் அனைவரும் கடவுளை தரிசிக்கிற உரிமையை உறுதி செய்ய வேண்டும். எல்லாவற்றிலும் முன்னோடி மாநிலமாக இருக்கிற தமிழ்நாட்டில் அனைவரும் வழிபாட்டு உரிமை பெறுகிற வகையில் ஒத்துழைக்க வேண்டும்.

- செல்வப்பெருந்தகை



தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளுக்கு, தி.மு.க. அரசுக்கு எதிராக வெளிப்படையாகக் கருத்து தெரிவிக்க தைரியம் இல்லை. இது தி.மு.க. கூட்டணியில் ஜனநாயகம் இல்லை என்பதைக் காட்டுகிறது. தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு ஜனநாயக முறையில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த சுதந்திரம் இருக்கிறது.

- தமிழிசை

# குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு

**கரூர்,செப்.19-**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி (18.09.2025) மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் மாவட்டம், குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் கூடுதலாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை ஆய்வு மேற்கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி ஆகியோர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் கடந்த 2023 நவம்பர் 14ம் தேதி ஒரே நேரத்தில் 19 மாவட்டங்களில் புதிதாக மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளையும், 6 இடங்களில் கூடுதலாக மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக 6 மருத்துவமனைகளும் என மொத்தம் 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் ரூ. 1018 கோடி செலவில் கட்டப்படும் என அறிவித்தார்கள்.அதன்படி கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் குளித்தலை மற்றும் கரூர் ஆகிய 2 இடங்களில் 1 மாவட்ட அரசு தலைமை மருத்தவமனை மற்றும் 1 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையான மருத்துவமனையும் கொண்டுவர அறிவிப்பு வெளியிட்டார்கள்.

குளித்தலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 2024 ம் ஆண்டு பிப்ரவரி 9ம் தேதி ரூ. 40.00 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டது. குளித்தலை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, பிசியோதெரபி, தொற்றா நோய் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, டயாலிசிஸ் பிரிவு, கண் பாதுகாக்கும் பிரிவு, எலும்பு, பல் சிகிச்சைப் பிரிவு, சிறப்பு புற நோயாளிகள் பிரிவு, குழந்தைகள் நல பிரிவு, இரத்த மையம், மகப்பேறு மருத்துவப் பிரிவு, சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பிரிவு, நவீன அறுவை சிகிச்சை அரங்குகள் என பல்வேறு வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தரச் சான்றிதழ் மற்றும் லக்சயா சான்றிதழ்களை பெற்ற முதல் மருத்துவமனை குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்தவமனை என்பது மேலும் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளதென மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி ஆகியோர் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின் போது குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், குளித்தலை சார் கலெக்டர் தி.சுவாதி ஶ்ரீ மருத்துவப் பணிகள் இணை இயக்குநர் மரு. செழியன், குளித்தலை நகர்மன்ற தலைவர் சகுந்தலா பல்லவி ராஜா, நகராட்சி ஆணையர் நந்தகுமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுஜாதா, வருவாய் வட்டாட்சியர் இந்துமதி, மருத்துவர்கள், செவிலியர்கள் அலுவலர்கள் உடனிருந்தனர்.












# சேலம் மாநகராட்சியில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் நேரில் ஆய்வு



**சேலம்,செப்.19-**

சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம் வார்டு – 35, 37 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வி.க.ரோடு செங்குந்தர் திருமண மண்டபத்தில் (18.09.2025) நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 17.09.2025 வரை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 99,520 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இது தவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 1,10,393 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, (18.09.2025) சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம் வார்டு – 35, 37 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வி.க.ரோடு செங்குந்தர் திருமண மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, தளவாய்பட்டி பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு தளவாய்பட்டி சமுதாய கூடத்திலும், நரசிங்கபுரம் நகராட்சி வார்டு – 6, 7 க்குட்பட்ட பகுதிகளுக்கு நரசிங்கபுரம் விநாயகபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், கொங்கணாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு-6, 9, 11, 12, 13, 14,15 க்குட்பட்ட பகுதிகளுக்கு கொங்கணாபுரம் ரங்கம்பாளையம் ஆனந்த மஹாலிலும், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்மாளப்பட்டி, தும்பல்பட்டி பகுதிகளுக்கு தும்பல்பட்டி கிராம ஊராட்சி செயலக வளாகத்திலும், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், நாவக்குறிச்சி, பட்டுத்துறை, புதூர் பகுதிகளுக்கு நாவக்குறிச்சி அம்மன் திருமண மண்டபத்திலும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் (18.09.2025) சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம் வார்டு – 35, 37 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு வி.க.ரோடு செங்குந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, முகாமில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் வழங்கிய மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு 11 நபர்களுக்கு புதிய குடிநீர் இணைப்புக்கான ஆணையும், 30 நபர்களுக்கு குடிநீர் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணையும், 12 நபர்களுக்கு பட்டாக்களும், 61 நபர்களுக்கு புதிய சொத்து வரி விதித்தலுக்கான உத்தரவு ஆணைகளும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின் போது, மண்டல குழு தலைவர் கே.டி.ஆர்.தனசேகரன், உதவி ஆணையர் வேடியப்பன், மாமன்ற உறுப்பினர் திருஞானம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அண்ணா 117-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் வெ.சரோஜா மாலை அணிவித்து மரியாதை



**ராசிபுரம்,செப்.19-**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பிள்ளாநல்லூர் பேரூராட்சி, பாவடி பகுதியில் பேரறிஞரின் 117-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அதிமுக மகளிர் அணி இணைச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மருத்துவர் வெ.சரோஜா பேரறிஞர் மற்றும் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செய்து, கழக முன்னோடிகளுக்கும் கழகத் தொண்டர்களுக்கும் இனிப்புகள் வழங்கினார். இவ்விழாவில் பிள்ளாநல்லூர்பேரூர் செயலாளர் பழனிச்சாமி, வார்டு செயலாளர்கள் தினேஷ், ஆதித்யா, முருகேசன், தனபால், ராமசாமி, இலங்கேஷ்வரன், செல்வராஜ் பேரூராட்சி கவுன்சிலர்கள் சாந்தி, ராமசாமி, பெரியசாமி, ருக்குமணி, முருகேசன், ஜெகதீஸ்வரி, தனபால், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கூட்டுறவு முன்னாள் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி கோ.ஆப்டெக்ஸ் நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை

## மாவட்ட வருவாய் அலுவலர் துவக்கி வைத்தார்



**கிருஷ்ணகிரி,செப்.19-**

கிருஷ்ணகிரி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2025 - 30% சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் (18.09.2025) குத்துவிளக்கேற்றி முதல் விற்பனையை துவக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் தெரிவித்ததாவது:

இந்தியாவின் மிகப்பெரிய கைத்தறி நிறுவனமாக விளங்கும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1935 முதல் தொடங்கப்பட்டு 90 ஆண்டுகளாக தமிழக அரசு கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையிலும் தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்குவதற்காக விழா காலங்களில் 30% வரை அரசு சிறப்பு தள்ளுபடி வழங்கி வருகிறது.

இந்தாண்டு தீபாவளி 2025-ல் புதிய வடிவமைப்புகளில் அசல் ஜரிகையுடன் கூடிய காஞ்சிபுரம் பட்டு புடவைகள், ஆரணி பட்டு புடவைகள், சேலம், தஞ்சாவூர் பட்டு புடவைகள் மற்றும் புதிய வடிவமைப்புடன் கூடிய மென்பட்டு புடவைகள் ஏராளமாக குவிந்துள்ளன. மேலும், கோவை, மதுரை, திண்டுக்கல், பரமக்குடி, திருச்சி மற்றும் சேலம் பகுதிகளில் தயாராகும் அனைத்து இரக காட்டன் புடவைகள் புதிய வடிவமைப்பிலும் மற்றும் களம்காரி காட்டன் புடவைகள் நேர்த்தியான வண்ணங்களிலும் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கோ-ஆப் டெக்ஸ்-ல் படுக்கை விரிப்புகள், அச்சிடப்பட்ட படுக்கை விரிப்புகள், வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள்,

ஜமக்காளம், காட்டன் சட்டைகள், லினன் சட்டைகள், அச்சிடப்பட்ட சட்டைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஏற்றுமதி இரகங்களான ஏப்ரான், குல்ட், மெத்தைகள், கையுறைகள், டேபு ள்மேட், ஸ்கிரின் துணிகள், தலையணை உறையுடன் கூடிய படுக்கை விரிப்புகள் மற்றும் பிரிண்டட் படுக்கை விரிப்புகள் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தமிழக அரசு கைத்தறி இரகங்களுக்கு 30% சிறப்பு தள்ளுபடி 15.09.2025 முதல் 30.11.2025 வரை வழங்குகிறது. இந்த கால கட்டத்தில் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை நிலையம் செயல்படும். அனைவரும் கைத்தறி துணிகளை வாங்கி நெசவாளர்களுக்கு உதவிட அன்புடன் கோ-ஆப்டெக்ஸ் கேட்டுக்கொள்கிறது.

விற்பனை இலக்கு

தீபாவளி 2025 பண்டிகைக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 3 விற்பனை நிலையங்களுக்கு ரூ.178.00 இலட்சங்கள் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட விற்பனை நிலையங்களின் கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்பு திட்டம்

கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்பு திட்டம் ரூ.300%- முதல் ரூ.3000%- வரை இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். மேலும், 11 மாத சந்தா தொகையை அங்கத்தினர் செலுத்தினால் 12 -வது மாத சந்தா தொகையினை கோ-ஆப்டெக்ஸ் செலுத்தி கூடுதல் பலன் தருவதால் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும். எனவே, பொதுமக்கள் கோ-ஆப்டெக்ஸின் தீபாவளி சிறப்பு தள்ளுபடியை பயன்படுத்தி, கைத்தறி ஆடைகளை வாங்கி நெசவாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த உதவிட வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கோ-ஆப்டெக்ஸ் முதுநிலை உதவியாளர் மாலதி, வட்டாட்சியர் சின்னசாமி, கிருஷ்ணகிரி விற்பனை நிலைய மேலாளர் மா.சிலம்பரசன் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்ட ம.தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா



**தருமபுரி,செப்.19-**

தருமபுரி பெரியார் மன்றத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் சிலைக்கு மதிமுகவின் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் ராமதாஸ் தலைமையில் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் வி ஏ பாலமுரளி சிலைக்கு மாலை அணிவித்தார் முன்னிலை ரா குணசேகரன் மாவட்ட அவைத்தலைவர் சி கிருபானந்தன் பொருளாளர் பி எம் ராஜாமணி மாநில விவசாய அணி துணை செயலாளர் மாவட்ட துணை செயலாளர்கள் சி பட்டு ராஜா கே ஆதிமூலம் ஆகியோர் முன்னிலை வைத்தனர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில அமைப்பாளர் மானமிகு தோழர் ஊமை ஜெயராமன் கலந்து கொண்டு சிறப்பித்தார் ஒன்றிய கழக செயலாளர் தர்மபுரி வடக்கு க. முனுசாமி தெற்கு என் காந்தி நல்லம்பள்ளி தெற்கு டி எம் சிவராமன் வடக்கு பீ சரவணன் காரிமங்கலம் நஞ்சுண்டன் நகரக் கழக செயலாளர் தர்மபுரி பட்டு சுப்பிரமணியன் அரூர் கீரை அப்துல் மஜீத் தருமபுரி முன்னாள் ஒன்றிய செயலாளர் சிவபாதம் பொதுக்குழு உறுப்பினர்கள் பாபு பத்மநாபன் தருமபுரி இளைஞரணி ராஜவேல் பழைய தருமபுரி வெங்கட்ராமன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# ஊத்தங்கரை அருகே பிரதமர் மோடி 75 வது பிறந்தநாள் விழா

**கிருஷ்ணகிரி,செப்.19-**

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு ஆலோசனைப்படி, மாவட்ட செயலாளர் ஆடிட்டர் மகாராஜன் தலைமையில் தெற்கு ஒன்றிய தலைவர் தமிழ் செல்வம், கலை மற்றும் கலாச்சார பிரிவு மண்டல செயலாளர் சங்கீதா தினகரன் ஆகியோர் முன்னிலையில் ஊத்தங்கரை தெற்கு ஒன்றியம் சார்பில் பாவக்கல் ஊராட்சியில் நல்லவன்பட்டி மற்றும் பாவங்கல் கிராமத்தில் பொதுமக்களுடன் கேக் வெட்டி பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதைத் தொடர்ந்து மண்ணாடிப்பட்டி மொழுகுபதி இராமன் கோவிலில் பாரத பிரதமரின் பெயரில் அர்ச்சனை செய்து சிறப்பு பூஜை செய்தனர். கல்லாவி ஊராட்சியில் அதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுடன் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. தொடர்ந்து மாலை ஊத்தங்கரை பேரூராட்சியில் மாவட்ட தலைவர் கவியரசுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன, இது போன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் 75 ஆவது பிறந்தநாள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் மண்டல பொருளாளர் பிரபாகரன், மண்டல பொது செயலாளர் செந்தமிழ் செல்வன், மண்டல செயலாளர்கள் விஜயராஜ், சிவசங்கர், வழக்கறிஞர் தண்டபாணி, தாமரைச்செல்வி, துணை தலைவர் சிங்காரவேலன் உள்பட ஏராளமான பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஓமலூர் அடுத்த காடையாம்பட்டி வட்டாரத்தில் கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி



**ஓமலூர்,செப்.19-**

சேலம் மாவட்டம்,ஓமலூர் அடுத்த காடையாம்பட்டி வட்டாரத்தில் டேனிஷ்பேட்டை கிராமம் ராப்புகாடு பகுதியில் வேளாண்மைத்துறை அட்மா திட்டத்தின் கீழ் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகப்பிரியா விவசாயிகள் அனைவரையும் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் மாதவன் வேளாண் சார்ந்த திட்டங்கள் குறித்து கூறினார். வெங்கடேஷ் கரும்பு ஆய்வாளர் பொண்ணி சுகர்ஸ் கலந்து கொண்டு கரும்பு நடவு வயல் தயாரிப்பு, அடி உரமாக அங்கக உரங்கள் இடுதல்,கரும்பு நடவிற்கு விதைகரணை தயாரித்தல், சொட்டுநீர் பாசனம், போன்ற பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து கூறினார். இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். மதிய உணவு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட லோகநாயகி செய்திருந்தனர்.

# காவேரிப்பட்டணம் அருகே ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்க பூமி பூஜை

## ராஜ்யசபா உறுப்பினர் மு.தம்பிதுரை துவக்கி வைத்தார்



**கிருஷ்ணகிரி,செப்.19-**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தெற்கு ஒன்றியம் குடிமேனஅள்ளி ஊராட்சி தேவீரஹள்ளி நடு பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில் சமுதாயக்கூடம் அமைக்க ராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் கழக கொள்கை பரப்பு செயலாளரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற ராஜ்யசபா உறுப்பினருமான மு. தம்பிதுரை கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் ஒன்றிய கழக செயலாளருமான சி.வி ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர் கிருஷ்ணன், ஜெயபால், முன்னாள் மாவட்ட செயலாளரும் எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளருமான கோ.ரவிச்சந்திரன், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் வெற்றிச்செல்வன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கார்த்திகேயன், முன்னாள் காவேரிப்பட்டினம் ஒன்றிய கழக செயலாளர் பிரபாகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சிவலிங்கம், இந்து சமய அறநிலைத்துறை ராமமூர்த்தி உள்ளிட்ட ஏராளமான அதிமுக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தருமபுரி**

திரு/ சிவா
த/பெ குட்டியப்பன்,
சி.ஊர்நத்தம் கிராமம்,
தொண்ணகுட்டஅள்ளி
பென்னாகரம் வட்டம்,
தருமபுரி மாவட்டம் - 636810.
.....மனுதாரர்

/எதிராக/

வட்டாட்சியர் அலுவலகம்
பென்னாகரம்.
.....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், தொண்ணகுட்டஅள்ளி தரப்பு, . ஊர்நத்தம் கிராமம் கிராமத்தை சேர்ந்தவர் குட்டியப்பன் என்பவர் கடந்த 01.08.1998-ம் தேதியில் இறந்துள்ளார். மேற்படியார் இறப்பு தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் சமூகம் கோட்டாட்சியர் அலுவகலத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

இங்ஙனம்
வருவாய் கோட்டாட்சியர், தருமபுரி
திரு/ சிவா
த/பெ குட்டியப்பன்,
சி.ஊர்நத்தம் கிராமம்,
தொண்ணகுட்டஅள்ளி
பென்னாகரம் வட்டம்,
தருமபுரி மாவட்டம் - 636810.

**மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், கரூர்**
**O.S. No.542/2021**

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம். சுக்காம்புலியூர் அஞ்சல், நெ.51/4 பொதியம்பள்ளம் என்ற முகவரியில் வசிக்கும் நாட்ராயன் அவர்கள் குமாரர் ரேவந்த்.
– வாதி

– எதிர் –

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், சுண்ணாம்புக்கார தெரு, நெ.15/டி பேட்டை என்ற முகவரியில் வசிக்கும் லேட். பெரியசாமி அவர்கள் மகன் செல்வராஜ்.
– 1–ம் பிரதிவாதி

1–ம் பிரதிவாதிக்கு சம்மன்

வாதிக்கு 1–ம் பிரதிவாதியின் தாயாரான குஞ்சம்மாள், க/பெ. பெரியசாமி கடந்த 24.09.2019–ம் தேதியில் ரூ.4,00,000/–க்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டின்படி செலுத்த வேண்டிய அசல் கடன் தொகை, கூடும் வட்டி, பின்வட்டி மற்றும் செலவு தொகை வேண்டி ஷை தாவா தொடர்ந்தும் ஷை வழக்கில் 06.10.2025–ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே கனம் நீதிமன்றத்தில் ஷை தேதியில் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக உத்தரவு ஏற்படும் என்பதையும் இதன் மூலம் கண்டிப்பாக அறியவும்.

N.பிரகாஷ், B.A.,B.L.,
N.செல்வக்குமார், B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், கரூர்.

விண்ணின் மழைத்துளி | மண்ணின் உயிர்த்துளி

**பொ.மல்லாபுரம் முதல் நிலை பேரூராட்சி**
**தருமபுரி மாவட்டம்.**
**பலவகைப்பட்ட வரவினங்கள் 2025-2026**
**ஏல குத்தகைகள் விபரம்**

(1998 தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் மற்றும் 2023 நகர்புற உள்ளாட்சி விதிகள்-ன்படி)

ந.க.எண்.329/2023/அ1 நாள் : 28.08.2025

**பொது ஏல விளம்பர அறிவிப்பு (ம) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

பொ.மல்லாபுரம் பேரூராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் இனங்களுக்கான உரிமங்களுக்கான 2025-2026ம் ஆண்டிற்கு 12.09.2025 அன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு பொ.மல்லாபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். அதுசமயம் ஏலம் கேட்கும் நபர்கள் ஆஜராகி கீழ்கண்ட இனங்களுக்கான டேவணித் தொகையை செலுத்தி ஏலம் கேட்கலாம். எவ்வித காரணமும் இன்றி ஏலத்தை ஏற்றுக் கொள்ளவோ அல்லது ரத்து செய்யவோ, செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.பழைய ஏல உரிமத் தொகை மற்றும் வரியினங்கள் பாக்கி உள்ளவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் அனைத்து ஏலங்களும், பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

அட்டவணை

| வ. எண் | ஏல விடும் இனங்கள் | குத்தகை காலம் | ஏல வைப்புத் தொகை (வங்கி உண்டி மூலமாக) ரூ. | கொடுக்க வேண்டிய சொத்து மதிப்பு சான்று 01.12.2024ம் தேதிக்கு பிறகு பெறப்பட்டது. ரூ. | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் கூடுதலாக செலுத்த வேண்டிய தொகை (வங்கி வரைவு மூலமாக) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய சுங்கம் | ஒரு ஆண்டு | 50,000/- | 5,00,000/- | 2,00, 000/- |
| 2 | பேருந்து நிலைய SJSRY Shop | 3 ஆண்டுகள் | 20,000/- | 1,00,000/- | 50, 000/- |

குறிப்பு:- ஏல தேதிக்கு முதல் நாளிலிருந்து டேவணித் தொகை மற்றும் சொத்து மதிப்பு சான்று, அல்லது சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் கூடுதலாக செலுத்த வேண்டிய தொகை முதலியவைகளுக்கு EXECUTIVE OFFICER, TOWN PANCHAYAT, B.MALLAPURAM என்ற பெயரில் பொ.மல்லாபுரத்தில் மாற்றத்தக்க வங்கி வரைவோலை மூலமாகவோ அல்லது வங்கி காசோலையாக (Banker Cheque)செலுத்தி அனுமதி சீட்டு பெற்றுக் கொள்ளவேண்டும். அனுமதி சீட்டு பெற்றவர்கள் மட்டுமே ஏலத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். கூடுதலாக ஒருவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் எந்த ஒரு உச்ச கேள்வி கேட்டு ஏலம் எடுத்துள்ளாரோ அந்த இனங்கள் அனைத்திற்கும் ஏலம் நடைபெற்ற அன்றே ஏலத் தொகை முழுவதும் உடனடியாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் ஏலதாரர் செலுத்திய டேவணித் தொகை மற்றும் கூடுதல் டேவணித் தொகை முழுவதும் பறிமுதல் செய்து அரசு நிதியில் சேர்க்கப்பட்டு ஏல டேவணி வழங்கப்படமாட்டாது. மறு ஏல நடவடிக்கைகள் தொடரப்படும். மேலும் ஏலம் தொடர்பான நிபந்தனைகளை பேரூராட்சி அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளவும்.

(ஓம்)பு.சாந்தி
தலைவர்
பொ.மல்லாபுரம் பேரூராட்சி
தருமபுரி மாவட்டம்

(ஓம்) சு.ஜீவாநந்தம்
செயல் அலுவலர்
பொ.மல்லாபுரம் பேரூராட்சி
தருமபுரி மாவட்டம்

வெ.ஆ.எண்: 109/2025 செ.ம.தொ.அ, தருமபுரி நாள்: 18.09.2025

## உலக தடகள சாம்பியன்ஷிப்:

# பதக்க வாய்ப்பை இழந்து வெளியேறிய நீரஜ் சோப்ரா




**டோக்கியோ, செப். 19-**

உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்க வாய்ப்பை இழந்து நீரஜ் சோப்ரா வெளியேறியது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஜப்பான் தலைநகரில்...**

20-வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் தகுதி சுற்று நடந்தது. இறுதிப்போட்டியை எட்டுவதற்கான தூரம் 84.50 மீட்டர் என நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. அதை எட்ட வேண்டும் அல்லது அதிக தூரம் வீசும் டாப்-12 வீரர்கள் இறுதிப்போட்டிக்குள் நுழைவார்கள். இதில் மொத்தம் 37 வீரர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

**இலக்கை அடைந்தார்...**

மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் களம் கண்ட நடப்பு சாம்பியனான இந்திய வீரர் நீரஜ் சோப்ரா எளிதில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார். அவர் தனது முதல் முயற்சியிலேயே 84.85 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து தகுதி இலக்கை அடைந்தார். பதக்கத்துக்கான இறுதிப்போட்டி நேற்று நடந்தது . இதில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா மிக மோசமாக செயல்பட்டார். முதல் வாய்ப்பில் 84.03 மீட்டர் தூரம் வீசினார் நீரஜ் சோப்ரா. தொடர்ந்து மற்ற வாய்ப்புகளில் அவர் 84.03 மீட்டருக்கும் குறைவாகவே வீசினார். இதனால் நீரஜ் சோப்ராவின் அதிகபட்சம் 84.03 மீட்டராக எடுத்துக்கொள்ளப்பட்டது.

**ரசிகர்கள் அதிர்ச்சி...**

இதனால் நீரஜ் சோப்ரா 8வது இடம் பிடித்து பதக்க வாய்ப்பை இழந்தார் . பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நீரஜ் சோப்ரா வெளியேறியதால் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். மற்றொரு இந்திய வீரர் சச்சின் யாதவ் 86.27 தூரம் வீசி 4வது இடம் பிடித்து பதக்க வாய்ப்பை இழந்தார்.

## பாகிஸ்தான் கேப்டன், மேனேஜரிடம்

# மன்னிப்பு கேட்டார் ஐ.சி.சி. நடுவர் ஆண்டி பைக்ராஃப்ட்



**அபுதாபி, செப். 19-**

ஆசியக் கோப்பையின் சர்ச்சை நாயகனான ஜிம்பாப்வே முன்னாள் வீரரும் ஆசியக் கோப்பை ஐ.சி.சி. ஆட்ட நடுவருமான ஆண்டி பைகிராப்ட் பாகிஸ்தான் கேப்டன் சல்மான் ஆகா மற்றும் மேனேஜரிடம் மன்னிப்புக் கேட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**ஆட்ட நடுவராக...**

சர்ச்சைகளை கிளப்பிய கைகுலுக்கல் விவகார இந்தியா - பாகிஸ்தான் மேட்சில் ஆட்ட நடுவராக இருந்தவர் ஆண்டி பைகிராஃப்ட். யு.ஏ.இ. அணிக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் களமிறங்குவதில் தாமதம் ஏற்பட்டது, ஆட்ட நடுவர் ஆண்டி பைகிராப்ட்டை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் வாரியம் எதிர்ப்பு தெரிவித்திருந்தது, அதற்கு ஐ.சி.சி. மறுப்பு தெரிவித்திருந்தது, இந்நிலையில் மைதானத்திற்கு வருவதற்கு பாகிஸ்தான் வீரர்கள் தாமதம் செய்தனர்.

**மன்னிப்புக் கேட்டார்...**

ஆட்டம் ஒரு மணி நேரம் தாமதமானது இந்தச் சர்ச்சையினால்தான். இந்நிலையில் ஆண்டி பைகிராஃப்ட், பாகிஸ்தான் கேப்டன், பாகிஸ்தான் மேலாளர் ஆகியோர் தனியறையில் சந்தித்ததாகத் தெரிகிறது, அதன் பிறகே பாகிஸ்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கேப்டன் மற்றும் மேலாளரிடம் ஆட்ட நடுவர் ஆண்டி பைக்ராஃப்ட் மன்னிப்புக் கேட்டார். இந்தியா-பாகிஸ்தான் போட்டியின் போது இரு அணி வீரர்கள் கைகுலுக்குவதை இவர் தான் தடுத்தார்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆஸி. மகளிரணி மோசமான சாதனை



**சண்டீகர், செப். 19-**

ஆஸ்திரேலிய மகளிரணி ஒருநாள் கிரிக்கெட்டில் தனது மிக மோசமான சாதனையை நிகழ்த்தியுள்ளது.

**292 ரன்கள் குவிப்பு...**

இந்திய மகளிரணிக்கு எதிரான போட்டியில் ஆஸி. மகளிரணி 102 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது. இந்தியா- ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி சண்டீகரில் நேற்று முன்தினம் (செப். 17) நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதலில் பேட் செய்து 49.5 ஓவர்களில் 292 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

**ஆஸி. ரசிகர்கள்...**

அடுத்து விளையாடிய ஆஸி. அணி 40.5 ஓவர்களில் 190 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதுவரை, ஆஸி. மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றிலேயே இவ்வளவு மோசமாக தோற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதிக முறை ஒருநாள் உலகக் கோப்பை வென்ற அணியின் இந்தத் தோல்வி ஆஸி. ரசிகர்களை கலக்கமடையச் செய்துள்ளது.

### ஆஸி.யின் மோசமான தோல்விகள்:

1) 102 ரன்கள் வித்தியாசத்தில் - இந்தியாவுக்கு எதிராக, 2025.
2) 92 ரன்கள் வித்தியாசத்தில் - இங்கிலாந்துக்கு எதிராக, 1973.
3) 88 ரன்கள் வித்தியாசத்தில் - இந்தியாவுக்கு எதிராக, 2004.
4) 84 ரன்கள் வித்தியாசத்தில் - தெ.ஆ. எதிராக, 2024.
5) 82 ரன்கள் வித்தியாசத்தில் - நியூசிலாந்துக்கு எதிராக, 2008.

# ஆசிய கோப்பை: சூப்பர் 4 சுற்றுக்கு பாக்., தகுதி

**துபாய், செப். 19-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் லீக் போட்டியில் ஐக்கிய அரபு அமீரகத்தை 41 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அபார வெற்றி பெற்று ஏ பிரிவில் இருந்து 2-வது அணியாக சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**பந்துவீச்சு தேர்வு...**

8 அணிகள் பங்கேற்றுள்ள 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் துபாயில் நேற்று முன்தினம் இரவு அரங்கேறிய 'ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியனான பாகிஸ்தான் அணி, ஐக்கிய அரபு அமீரகத்துடன் (யு.ஏ.இ.) மோதியது. இதில் 'டாஸ்' ஜெயித்த அமீரக கேப்டன் வாசீம் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

**ஷகீன்ஷா அப்ரிடி...**

இதைத் தொடர்ந்து முதலில் பேட் செய்த பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. சைம் அயூப் தொடர்ந்து 3-வது முறையாக டக்-அவுட் ஆனார். மற்றொரு தொடக்க வீரர் பர்ஹான் 5 ரன்னில் அடங்கினார். இதன் பின்னர் பஹர் ஜமான் (50 ரன்), கேப்டன் சல்மான் ஆஹா (20 ரன்) சரிவை சமாளித்தாலும் பின்வரிசை வீரர்கள் திணறினர். கடைசி கட்டத்தில் ஷகீன்ஷா அப்ரிடி 29 ரன்கள் (14 பந்து, 3 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்து சவாலான ஸ்கோருக்கு உதவினார். 20 ஓவர் முடிவில் பாகிஸ்தான் 9 விக்கெட்டுக்கு 146 ரன் எடுத்தது. அமீரகம் தரப்பில் ஜூனைத் சித்திக் 4 விக்கெட்டும், சிம்ரன் ஜீத் சிங் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

**105 ரன்களில்...**

பின்னர் 147 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய யு.ஏ.இ. அணி பாகிஸ்தானின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 17.4 ஓவர்களில் 105 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 41 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அபார வெற்றி பெற்றது. 2 விக்கெட் கைப்பற்றியதுடன் இறுதி கட்டத்தில் பேட்டிங்கிலும் அசத்திய ஷாகீன் அப்ரிடி ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

**சூப்பர் 4 சுற்றுக்கு...**

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டியில் விளையாடி 2 வெற்றி கண்ட பாகிஸ்தான் ஏ பிரிவில் இருந்து 2-வது அணியாக சூப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஏற்கனவே இந்த பிரிவிலிருந்து முதல் அணியாக இந்தியா தகுதி பெற்றுவிட்டது. யு.ஏ.இ. மற்றும் ஓமன் அணிகள் முறையே அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறியது.

# அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறக்க அரசு ஆணை

**சென்னை, செப். 19-**

47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களை சார்ந்த 10 அமராவதி பழைய வாய்க்கால்களின் (அலங்கியம் முதல் கரூர் வலது கரை வரை) பாசன பகுதிகளில் மொத்தம் 21,867 ஏக்கர் நிலங்களுக்கு, அமராவதி அணையின் ஆற்று மதகு வழியாக வினாடிக்கு 700 கன அடி வீதம் 4233.60 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், திருப்பூர் மாவட்டம், அமராவதி புதிய பாசன பகுதிகளில் மொத்தம் 25,250 ஏக்கர் நிலங்களுக்கு, அமராவதி முதன்மை கால்வாய் வழியாக வினாடிக்கு 440 கன அடி வீதம் 2661.12 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், 19.09.2025 முதல் 31.01.2026 வரையிலான காலத்தில் மொத்தம் 134 நாட்களில், 70 நாட்கள் தண்ணீர் திறப்பு, 64 நாட்கள் தண்ணீர் நிறுத்தம் என்ற அடிப்படையில், மொத்தம் 6894.72 மில்லியன் கன அடிக்கு மிகாமல், அமராவதி அணையிலிருந்து, பாசனத்திற்காக, தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள மொத்தம் 47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இந்த தகவல், தமிழக அரசு நீர்வளத்துறை செயலாளர் வெளியிட்டு உள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# உத்தரகாண்டில் மீண்டும் மேகவெடிப்பு

**டேராடூன், செப். 19-**

உத்தரகாண்டில் மீண்டும் மேகவெடிப்பால் பயங்கர மழை பெய்தது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் இம்மாத தொடக்கத்தில் இருந்து மேகவெடிப்பால் மழை கொட்டித் தீர்த்துக் கொண்டே வருகிறது. 4 நாட்களுக்கு முன்பு தலைநகர் டேராடூன், சம்பாவத், உதம் சிங் நகர் உள்ளிட்ட பல இடங்களில் மேகவெடிப்பு காரணமாக இடைவிடாமல் மழை பெய்தது. சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதால் 13 பேர் உயிரிழந்தனர். 900-க்கும் மேற்பட்டவர்கள் வெள்ளத்தில் சிக்கித் தவித்தனர்.

இந்த நிலையில், சமோலி மாவட்டம் நந்தநகர் காட்டில் உள்ள குந்த்ரி லங்காபாலி பகுதியில் நேற்று அதிகாலை மேகவெடிப்பால் வானம் பொத்துக்கொண்டு ஊற்றியது போல பயங்கர மழை பெய்தது. இதனால் அனைத்து ஆறுகளிலும் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளத்தில் 10-க்கும் மேற்பட்ட வீடுகள் அடித்து செல்லப்பட்டன. வீடுகள் மண்மேடு போல புதைந்து போனதால், அதில் வசித்த 9 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கினர்.

இது குறித்து அறிந்ததும் மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். மருத்துவ குழுவினரும் ஆம்புலன்ஸ் வாகனங்களுடன் அங்கு சென்றனர். இடிபாடுகளை அகற்றி உயிருக்கு போராடிக்கொண்டிருந்த 2 பேரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர். இன்னும் 10 பேரைக் காணவில்லை; அவர்கள் உயிருடன் உள்ளார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. பாலங்கள், சாலைகள் முற்றிலும் சேதமடைந்ததால் பல இடங்கள் துண்டிக்கப்பட்டு தீவாக காட்சியளிக்கின்றன. உத்தரகாண்ட் புகழ்பெற்ற தப்கேஷ்வர் கோவிலை வெள்ளம் மூழ்கடித்துச் சென்றது. அந்தக் கோவிலின் நுழைவுவாயிலில் உள்ள அனுமன் சிலை தண்ணீரில் மூழ்கியதால் வெளியே தெரியவில்லை. தொடர்ந்த மழை, நிலச்சரிவால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதால் உத்தரகாண்டுக்கு சுற்றுலா வந்த 2,500-க்கும் மேற்பட்ட பயணிகள் சொந்த ஊர்களுக்கு திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றிலும் முடங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வருகிற 20-ந்தேதி வரை உத்தரகாண்ட் மாநிலத்தில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சிகப்பு நிற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

# மே.தீவுகள் அணி அறிவிப்பு




நேபாளத்துக்கு எதிரான டி20 தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் நேபாள அணிகள் தங்களுக்குள் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடவுள்ளன. இந்த டி20 தொடரானது ஷார்ஜாவில் நடைபெறவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி வருகிற செப்டம்பர் 27 ஆம் தேதி நடைபெறுகிறது.இந்த நிலையில், நேபாளத்துக்கு எதிரான டி20 தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் முக்கிய வீரர்கள் பலருக்கும் ஓய்வு அளிக்கப்பட்டு, அணியில் 5 அறிமுக வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். முக்கிய வீரர்களான சாய் ஹோப், அல்சாரி ஜோசப், மற்றும் ஜான்சன் கார்ல்ஸூக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட அணியை சுழற்பந்துவீச்சாளர் அகீல் ஹொசைன் கேப்டனாக வழிநடத்தவுள்ளார். அறிமுக வீரர்களாக பேட்டர் அக்கீம் அகஸ்டி, ஆல்ரவுண்டர் நவின் பிடாய்சி, சுழற்பந்துவீச்சாளர் ஸீஷன் மொட்டாரா, வேகப் பந்துவீச்சாளர் ரமோன் சிம்மண்ட்ஸ் மற்றும் விக்கெட் கீப்பர் அமீர் ஜாங்கோ அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# காலிறுதிக்கு பி.வி.சிந்து தகுதி



இந்திய பாட்மின்டன் வீராங்கனை பி.வி.சிந்து சீனா மாஸ்டர்ஸில் ரவுண்ட் ஆஃப் 32-இல் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் பி.வி.சிந்து காலிறுத்திக்கு முன்னேறியுள்ளார். சீன மாஸ்டர்ஸில் ரவுண்ட் ஆஃப் 32-இல் இந்தியாவின் பி.வி.சிந்து- தாய்லாந்தின் சோசூவாங் மோதினார்கள். 41 நிமிஷங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் பி.வி.சிந்து 21-15, 21-15 என்ற நேர் கேம்களில் அசத்தலாக வெற்றி பெற்றார்.

தரவரிசையில் 14-ஆவது இடத்தில் இருக்கும் சிந்து 6-ஆவது இடத்தில் இருக்கும் சோசூவாங்கை வென்றதன் மூலம் அவருடனான மோதலில் 6-5 என தனது ஆதிக்கத்தையும் நீட்டித்துள்ளார். காலிறுதியில் பி.வி.சிந்து டாப் ரேங்கில் இருக்கும் கொரியாவின் அன் சே யங் அல்லது டென்மார்க்கின் மியா பிலிச்பெல்ட் உடன் மோதுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்':

# தமிழகம் முழுவதும் தீர்மான கூட்டங்கள் நடத்த உத்தரவு

## தி.மு.க. தலைமை அறிவிப்பு வெளியீடு

**சென்னை, செப். 19-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்த 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' என்ற தீர்மான விளக்கக் கூட்டங்கள் வருகிற செப். 20, 21 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்று தி.மு.க. தலைமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கடந்த செப். 15 ஆம் தேதி முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாளையொட்டி முதல்வர் ஸ்டாலின், 'தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்' என்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டார். இதையடுத்து தி.மு.க.வில் 'ஓரணியில் தமிழ்நாடு' அணியில் இணைந்துள்ள அனைவரும் இந்த உறுதிமொழியை ஏற்கும் பொருட்டு சிறப்பு விளக்கக் கூட்டங்கள் நடத்த தி.மு.க. தலைமை உத்தரவிட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தி.மு.க. வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டின் மண்-மொழி மானம் காக்க கழகத் தலைவரால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' என்ற தீர்மான ஏற்பு கூட்டங்கள் செப்டம்பர் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில், கழக மாவட்ட வாரியாக பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் ஏற்றுமதி 6 சதவீதம் வரை அதிகரிக்கும்: பியூஷ் கோயல்

**மும்பை, செப். 19-**

இந்தியாவின் ஏற்றுமதி 6 சதவீதம் வரை அதிகரிக்கும் என பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மத்திய வர்த்தகத் துறை மந்திரி பியூஷ் கோயல் மும்பையில் நிருபர்களிடம் கூறியதாவது:-

பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். மகாத்மா காந்தியின் தூய்மை இந்தியா வேண்டுகோளை மக்கள் மறந்தனர். ஆனால் பிரதமர் மோடி அதை மீண்டும் உயிர்ப்பித்தார். மேலும் காந்தியின் சுயசார்பு குறித்த அழைப்பை விடுத்தார். அதை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.

அமெரிக்காவுடனான இந்தியாவின் உறவு நல்லமுறையில் சென்றுகொண்டு இருக்கிறது. கடந்த சில மாதங்களாக இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், மோடிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவும், அமெரிக்காவும் நட்பு நாடுகள். இரு நாட்டு தலைவர்களும் நண்பர்கள், அனைத்து பிரச்சினைகளும் திருப்திகரமாக சரி செய்யப்படும்.

இந்தியாவுக்கு பல்வேறு சவால்கள் இருந்தபோதிலும் உலக வர்த்தகத்தில் நாடு வலுவான செயல்திறனுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு இந்தியாவின் ஏற்றுமதி சுமார் 6 சதவீதம் அதிகரிக்கும். எனவே இந்த ஆண்டையும் சிறப்பாக முடிப்போம் என்று நம்புகிறேன்.

இந்தியா 4 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தில் இருந்து 30 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக உயர்ந்துள்ளது. இது இந்தியா வணிகம் செய்வதற்கு சிறந்த இடம் என்பதை தெளிவாக காட்டுகிறது. உலக நாடுகள் இந்தியாவுடன் நெருக்கமாக பணியாற்ற விரும்புகிறது.

மேலும் 5.1 சதவீதம் என்ற மிக குறைந்த வேலையின்மை தரவை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். இந்தியா வாய்ப்புகளின் பூமியாகும். வேலையின்மை உள்ளதாக தொடர்ந்து குற்றச்சாட்டு வைப்பது கவர்ச்சிகரமாக இருக்கலாம். உண்மையில் எல்.அன்ட்.டி. மற்றும் ஐ.டி. நிறுவனங்களில் ஆட்கள் தேவை இருந்து வருகிறது.

தற்போது ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் உட்கட்டமைப்பை அதிகரிப்பதுடன், முதலீடு, வேலை வாய்ப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்துறையின் வளர்ச்சிக்கு மற்றொரு ஊக்கத்தை அளிக்கும். பல நாடுகள் இந்தியாவுடன் சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தங்களில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## வாக்கு திருட்டு தொடர்பான

# ராகுலின் குற்றச்சாட்டுக்கு தேர்தல் ஆணையம் மறுப்பு

**புதுடெல்லி, செப். 19-**

வாக்கு திருட்டு தொடர்பாக ராகுல் காந்தி கூறிய குற்றச்சாட்டுகள் தவறானவை, அடிப்படை ஆதாரமற்றவை என்று தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்துள்ளது. எந்த வாக்காளரையும் ஆன்லைன் மூலம் நீக்க முடியாது என்றும் விளக்கமளித்துள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் லட்சக்கணக்கான வாக்காளர்களை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குகின்றனர். குறிப்பாக எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிப்பவர்கள், பட்டியலின, பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். வாக்கு திருட்டு தொடர்பாக பலமுறை கேள்விப்பட்டிருந்தாலும், தற்போது தான் 100 சதவீதம் ஆதாரத்தை கண்டறிந்துள்ளோம். ஜனநாயக நடைமுறைகளை பாதுகாப்பதற்காகவே இதனை நான் செய்கிறேன்.

வாக்கு திருட்டில் ஈடுபடுபவர்களை தலைமை தேர்தல் ஆணையர் பாதுகாக்கிறார்.லட்சக்கணக்கானோரை குறிவைத்து வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம், வாக்கு திருட்டு மூலம் இந்திய ஜனநாயகம் அழிக்கப்படுகிறது என தேர்தல் ஆணையம் மீது ராகுல்காந்தி பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்தநிலையில், ராகுல் காந்தி கூறிய குற்றச்சாட்டுகள் தவறானவை, அடிப்படை ஆதாரமற்றவை. ராகுல் காந்தி கூறியதுபோல் ஆன்லைன் மூலம் வாக்காளர்கள் யாரும் நீக்கப்படவில்லை. 2023-ல் அலந்த் தொகுதியில் பெயரை நீக்க சில முயற்சி நடந்தபோது, அதுபற்றி தேர்தல் ஆணையமே புகார் தந்தது. அலந்த் தொகுதியின் 2018-ல் பாஜக வேட்பாளரும், 2023-ல் காங்கிரஸ் வேட்பாளருமே வென்றனர் என வாக்காளர் பட்டியலில் முறைகேடு என ராகுல் காந்தி அளித்த பேட்டியை பகிர்ந்தது தேர்தல் ஆணையம் எக்ஸ் தள பதிவில் விளக்கம் அளித்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## வார விடுமுறை: இன்று முதல் 2 நாட்களுக்கு

# சென்னையில் இருந்து 1,035 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, செப். 19-**

வார இறுதி விடுமுறை நாட்களையொட்டி இன்று முதல் 2 நாட்களுக்கு சென்னையில் இருந்து 1,035 சிறப்பு பேருந்துகளை இயக்கவுள்ளதாக அரசு விரைவுப் போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

வார இறுதி விடுமுறை நாட்களையொட்டி சென்னை மற்றும் பல்வேறு நகரங்களில் இருந்து வெளியூர்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் இன்று முதல் 2 நாட்கள் தினசரி இயக்கப்படும் பஸ்களுடன், கூடுதலாக சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகின்றன. அதன்படி இந்த 2 நாட்களும் மொத்தம் 1,035 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று (19-ஆம் தேதி) 355 சிறப்பு பஸ்களும், வருகிற 20-ஆம் தேதி 350 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று 55 சிறப்பு பஸ்களும், வருகிற 20-ஆம் தேதி 55 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. வருகிற 21-ஆம் தேதி சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளன. வருகிற 21-ஆம் தேதி மகாளய அமாவாசை ஆகும்.

அன்று ராமேஸ்வரத்தில் பொதுமக்கள் தங்களின் முன்னோர்களுக்கு தர்ப்பணம் மற்றும் திதி கொடுப்பது வழக்கம். இதையொட்டி வருகிற 20-ஆம் தேதி சென்னை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து ராமேஸ்வரத்துக்கு கூடுதல் பஸ்கள் இயக்கப்படுகின்றன. மறுநாள் 21-ஆம் தேதி ராமேஸ்வரத்தில் இருந்து சென்னை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களுக்கு கூடுதல் பஸ்கள் இயக்கப்படுகின்றன. இந்த தகவலை அரசு விரைவுப்போக்குவரத்து கழகம் (எஸ்.இ.டி.சி) வெளியிட்டுள்ளது.

# அருப்புக்கோட்டையில் 191 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.9 கோடியே 24 லட்சம் கடனுதவி

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்





**அருப்புக்கோட்டை,செப்.19-**

அருப்புக்கோட்டை வேல்ராஜன் மண்டபத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு கடன் உதவி தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அருப்புக்கோட்டை வட்டாரத்தில் ஊரகம் மற்றும் நகர்ப்புர பகுதிகளில் உள்ள 191 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.9.24 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது.

முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுவை தொடங்கி வைத்தார்.

பெண்கள் பொருளாதாரத்தில் யாரையும் எதிர்பார்க்காமல் தன்னுடைய சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவி குழு செயல்படுத்தப்படுகிறது.

எவ்வித அடமானம் இல்லாமல் ரூ.50 இலட்சம் வரை கடன் மகளிர் சுயஉதவிக் குழு மூலம் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

அந்த அளவிற்கு அரசு பெண்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் கடனுக்கான பணத்தை கட்டும் போது, அடுத்த தடவை அதிகப்படியான கடன் உதவி தரப்படுகிறது. சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிற்கலாம். அதனை மென்மேலும் மேம்படுத்தி வருபவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் ஜார்ஜ் ஆண்டனி மைக்கேல், அருப்புக்கோட்டை நகர்மன்றத்தலைவர் சுந்தரலட்சுமி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் வசுமதி, தாசில்தார் செந்தி வேல் ,முன்னாள் நகர மன்ற தலைவர் சிவபிரகாசம், நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, நகரக் கழகச் செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ், நகர மன்ற உறுப்பினர்கள், மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சக்தி கலை அறிவியல் மகளிர் கல்லூரியில் பணி நியமன ஆணை வழங்கும் விழா




**ஒட்டன்சத்திரம்,செப்.19-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் 2025 – 2026 கல்வியாண்டிற்கான பணி நியமன ஆணை வழங்குதல் மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. கோவை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஆண்டிற்கு ரூ4.2 லட்ச ஊதியத்தில் பணி நியமன ஆணை பெற்றுள்ள 15 மாணவிகளின் சாதனைகளையும், கடின உழைப்பையும் கௌரவிக்கும் வகையில் விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி முதல்வர் ஆர். தேன்மொழி வரவேற்புரையாற்றினார்.

கல்லூரித் தலைவர் டாக்டர் கே. வேம்பனன் பாராட்டு உரையாற்றி, மாணவர்கள் உறுதி, உழைப்பு, மற்றும் ஒழுக்கத்தை கடைப்பிடித்து உயர்ந்த இடங்களை அடைய வேண்டும் என வலியுறுத்தினார். சக்தி கல்வி குழுமம் ஆலோசகர் குப்புசாமி மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த விழாவில் நியமனம் பெற்ற மாணவிகள் அவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, எதிர்கால மாணவிகளுக்கு ஊக்கமளிக்கும் உரைகளை வழங்கினர். டாக்டர். டி. மேரி ஜோசபின் இசபெல்லா விழிப்புணர்வு உரையாற்றி, தொழில்வாய்ப்புகள் மற்றும் திறன்களை மாணவர்கள் எவ்வாறு மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கூறினார். விழாவில் அனைத்து துறைத்தலைவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். முடிவில் கணினி அறிவியல் துறை, உதவி பேராசிரியை வைத்தீஸ்வரி நன்றி கூறினார்.

# நிலக்கோட்டை அருகே குரும்பபட்டி கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



**வத்தலகுண்டு,செப்.19-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் நக்கலூத்து,கூவனூத்து ஊராட்சிகளுக்குட்பட்ட குரும்பபட்டி கிராமத்தில் தமிழக அரசு உத்தரவுப்படி உங்களுடன் ஸ்டாலின் முகம் நடைபெற்றது.

முகாமிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் மாணிக்கம் தலைமை வகித்தார்,வட்டாட்சியர் விஜயலெட்சுமி முன்னிலை வகித்தனர்,ஊராட்சி செயலர் துரைமாணிக்கம் வரவேற்றார்.

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் எழில் வளவன் விழா நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

வருவாய் ஆய்வாளர் பாரதி கிராம நிர்வாக அலுவலர்கள் முத்துச்சரவணன் முத்துப்பாண்டி உதவியாளர் சவேரியார் மற்றும் வருவாய்த் துறையினர் கலந்து கொண்டார்கள்.

முகாமில் ஏராளமான பொதுமக்கள் ஆர்வமுடன் மனு அளித்தனர் .

இதில் 600க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டதில்,தமிழக அரசின் வழிகாட்டுதழ்படி பட்டா மாறுதல்,சாதிச்சான்றிதழ்,உடனடி தற்காலிக மின்இணைப்பு,இருப்பிட சான்றிதழ் பெயர் மாற்றம்,வருமான சான்றிதழ்கள் என உடனடியாக தீர்வு காணப்பட்ட 30 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மேற்கு ஒன்றிய செயலாளர் கரிகாலபாண்டியன் சான்றிதழ்கள் வழங்கினார்.

மேலும் இந்த முகாமில் தி.மு.க. நிர்வாகிகள்ஜான் போஸ்கோ, பாலசந்திரன், செல்வம்,மலையாளம்,வேல் முருகன், கந்தபிரபு உட்பட ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள், அலுவலர்கள்,வருவாய்த்துறையினர் உட்பட பல்வேறு அரசு துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சிறந்த நகர செயலாளராக தேர்வான மேலூர் முகமது யாசினுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கினார்




**மேலூர், செப்.19-**

கரூரில் தி.மு.க. மாவட்ட கழக கூட்டத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் மதுரை வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற அனைத்து ஆர்ப்பாட்டம், பொது கூட்டங்கள், மற்றும் மேலூர் நகரில் உள்ள 27 வார்டுகளை சேர்ந்த திமுக வட்ட கழக செயலாளர்களிடம் நல்ல அனு முறை பின்பற்றி பணிகளை திறம்பட செயல்பட்டதற்கு தமிழ்நாட்டின் சிறந்த நகர் கழக செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட மேலூர் நகர் கழக செயலாளரும், மேலூர் நகர்மன்ற தலைவருமான

உ.முகமது யாசினுக்கு தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் விருது மற்றும் 1 லட்சத்திற்குகான காச சோலையை உ.முகமது யாசினிடம் வழங்கி பாராட்டினார்.

உடன் கட்சியின் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, மதுரை வடக்குமாவட்ட கழகச் செயலாளரும், பதிவுத்துறை மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் பி. மூர்த்திஅவர்களிடம் நன்றி கூறி வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந. ஆனந்த, மாவட்ட, மாநில ஒன்றிய,நகர,பகுதி,வார்டு, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர,பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் வாழ்த்து தெரிவித்தனர்

# நத்தம் அருகே கரையம்மன், மலையம்மன் கோவில் திருவிழா



**நத்தம், செப். 19-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூர் கிராமம் பெரியஅரவங்குறிச்சியில் கரையம்மன், மலையம்மன், ஆலாத்தியம்மன் கோவில்களில் திருவிழா நடந்தது.இதையொட்டி அலங்கரிக்கபட்டு கோவிலுக்குள் வந்த அம்மன்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது. தொடர்ந்து நேற்று அதிகாலை பக்தர்கள் புடை சூழ அலங்கரிக்கபட்ட மின் ரதத்தில் கரையம்மன், மலையம்மன், ஆலாத்தியம்மன் உள்ளிட்ட பரிவார தெய்வங்கள் பூஞ்சோலை செல்லும் நிகழ்ச்சி நடந்தது.பின்னர் பக்தர்கள் பொங்கல் வைத்து கிடாய்கள் வெட்டி தங்களது நேர்த்திக் கடன்களை செலுத்தினர். விழாவில் சுற்று வட்டார கிராம பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# பூஜையுடன் தொடங்கிய காட்ஸ்ஜில்லா



சினிமா மீடியா அண்ட் என்டர்டெய்ன்மென்ட் லிமிடெட் - தினேஷ் ராஜ் வழங்கும், க்ரியேடிவ் என்டர்டெய்னர்ஸ் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் மற்றும் PGS புரொடக்ஷன்ஸ் இணைந்து தயாரிக்கும் படம் “காட்ஸ்ஜில்லா. புதுவிதமான கற்பனையுடன் உருவாகும் இந்த திரைப்படம் ஒரு “ரோம்-காம்” வகையைச் சார்ந்தது. இப்படத்தில் இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனன், தர்ஷன் மற்றும் பலர் நடிக்கின்றனர். இயக்குனர் மோகன் குரு செல்வா இயக்கவுள்ள இபடத்தின் பூஜை நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த பூஜையில் படக்குழுவினருடன் கலைப்புலி S. தாணு , R.K. செல்வமணி, இயக்குனர்கள் ஏ.எல். விஜய், சசி, பாண்டிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.. படம் பற்றி இயக்குனர் மோகன் குரு செல்வா கூறுகையில், காதலில் தோல்வியுற்ற இளைஞன் ஒருவனின் வாழ்க்கையில் தெய்வீகம் புகுவதன் மூலம் ஞானம் பெற்று மீண்டு வரும் பயணமே இப்படத்தின் மையக்கரு என்றார். மேலும், புராணம், கற்பனை, நவீன காதல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் புதுமையான திரை அனுபவமாக இப்படம் அமையும் என தயாரிப்பாளர்களின் ஒருவரான ஜி. தனஞ்ஜெயன் தெரிவித்தார்.

# 2026-ல் கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடியார் தலைமையில் பொற்கால ஆட்சி அமைவது உறுதி

## கழகப் பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் பேச்சு



**திண்டுக்கல், செப்.19-**

2026-ல் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் பொற்கால ஆட்சி அமைவது உறுதி. அதற்காக கழக நிர்வாகிகள் திறம்பட பணியாற்ற வேண்டும் என கழக பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் பேசினார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க 2026 ல் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தலையொட்டி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள பூத் கிளை கழகங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகள் குறித்த பயிற்சிக்கு திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளராக ஜெ.மாணிக்கம், கவி செல்வம் தங்கம், சி.என்.ஆர். செல்வகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல மதுரை மாநகர பொறுப்பாளர்களாக வீர மார்பன், கௌதம் பால்ராஜ், சேட்டை கார்த்தி நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

இதுகுறித்த ஆலோசனை கூட்டம் கழகப் பொருளாளரும்,திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.

அவர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகையில், வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் கழகம் மகத்தான வெற்றியை பெற உள்ளது. கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் மீண்டும் தமிழக முதலமைச்சராக உள்ளார். எனவே, கழக நிர்வாகிகள் மிகவும் திறம்பட செயலாற்றி மீண்டும் தமிழகத்தில் பொற்கால ஆட்சி அமைய பாடுபட வேண்டும். அதற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் மிகவும் திறம்பட செயலாற்ற வேண்டும் என்று பேசினார். நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் இராஜசேகர், தர்மராஜ், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், பகுதி செயலாளர்கள் மோகன், சுப்பிரமணி, சேசு, வி.டி.ராஜன், பி.ஜி.எம்.டி.முரளி, இக்பால், கலைப்பிரிவு செயலாளர் ரவிக்குமார், தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி மகராஜ் குமார் உள்ளிட்ட பங்கேற்றனர்.

# மழையால் பாதிக்கப்பட்ட மிளகாய் பயிருக்கு நிவாரணம்: ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் கலெக்டரிடம் கோரிக்கை



**ராமநாதபுரம்,செப்.19-**

கடந்த ஆண்டு மழையால் பாதிக்கப்பட்ட மிளகாய் பயிர்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் காப்பீட்டு தொகை வழங்க கோரி வைகை பாசன விவசாயிகள் சங்கம் கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

ராமநாதபுரம் மாவட்ட தமிழ்நாடு வைகை விவசாயிகள் சங்கம் நிறுவனத் தலைவர் பாக்கியநாதன் தலைமையில் ஏராளமான விவசாயிகள் நேற்று காலை கலெக்டர் அலுவலகத்திற்கு திரளாக வந்தனர் இவர்கள் கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோனை நேரில் சந்தித்து அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:-

ராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 16 ஆயிரத்து ,500 எக்டர் பரப்பளவில் கடந்த ஆண்டு மிளகாய் சாகுபடி செய்யப்பட்டது. திடீர் மழை மற்றும் பயிர்களில் பூச்சி தாக்குதல் காரணமாக மிளகாய் விவசாயம் அழிந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது, ஏக்கர் ஒன்றிற்கு சுமார் ரூ.75 ஆயிரம் வரை கடன் வாங்கி செலவு செய்த விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். இந்த பாதிப்பு தொடர்பாக மாவட்ட நிர்வாகம் சார்பில் ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை அளித்து பல மாதங்கள் ஆகியும் இதுவரை நிவாரணமோ, காப்பீட்டு தொகையோ வழங்கவில்லை. மிளகாய் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் மற்றும் 100 சதவீதம் காப்பீட்டுத் தொகை கேட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தியும் இதுவரை மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இனியும் காலதாமதம் செய்யாமல் நிவாரணத் தொகை மற்றும் 100 சதவீத தேசிய வேளாண் மிளகாய் பயிர் காப்பீட்டு தொகை வழங்கிட வேண்டும் இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் இதுதொடர்பாக அரசு பரிசீலனையில் உள்ளதால் விரைவில் விரைவில் தீர்வு கிடைக்கும் என்று உறுதி அளித்தார்.

# வத்தலக்குண்டு, நடகோட்டை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**வத்தலக்குண்டு,செப்.19-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உங்களுடன் .ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது. வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் நடகோட்டை ஊராட்சிக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சாந்திபுரம் பிரிவருகே ஒரு தனியார் திருமண மஹாலில் நடந்தது.

துவக்க விழாவுக்கு நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி செயலாளர் ஜெயச்சந்திரன், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குப்புசாமி, முருகேசன், , தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், கனிக்குமார்,கனக துரைஆகியோர் முன்னிலை வகித்தனர். கனிக்குமார் திட்டம் பற்றி விளக்கி பேசினார்.

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் புவனேஸ்வரி வரவேற்றார். முகாமில் வருவாய் ஆய்வாளர்கள் பரிமளம், வெண்ணிலா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சின்ன ராஜா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுமதி கிராம நிர்வாக அதிகாரி ஷர்மிளா பானு மற்றும் வருவாய், மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் துறை ரீதியான மனுக்களை பெற்றுக் கொண்டு உடனுக்குடன் ஆன்லைன் மூலம் பதிவு செய்தனர்.

வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் நாச்சியப்பன் முகாமை தொகுத்து வழங்கினார். முகாமில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் நட கோட்டை ஊராட்சி செயலாளர் ரஞ்சிதா நன்றி கூறினார். பாதுகாப்பு ஏற்பாடுகளை விருவீடுபோலீசார் செய்திருந்தனர்.



● சென்னை சோழிங்கநல்லூரில் நேற்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அவர் பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் குறைகளுக்கு உடனடி தீர்வை வழங்கினார்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி முன்னிலையில் நேற்று ஓமலூரில் உள்ள, சேலம் புறநகர் மாவட்டக்கழக அலுவலகத்தில், தி.மு.க., பா.ம.க., விடுதலை சிறுத்தைகள் கட்சிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்டோர் நேரில் சந்தித்து, தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக்கொண்டனர். இந்நிகழ்வின்போது, முன்னாள் அமைச்சர் செ.செம்மலை, சேலம் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர்ஆர். இளங்கோவன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## அ.தி.மு.க. விவகாரத்தில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

கூட்டணிக்குள் வர முயற்சிக்கிறார். பா.ஜ.க. கூட்டணியில் இருந்து தினகரன் வெளியேறிய நோக்கம் எனக்கு தெரியாது. தி.மு.க. முப்பெரும் விழாவில் செந்தில் பாலாஜியை பாராட்டும் இதே முதல்-அமைச்சர்தான், எதிர்க்கட்சியாக இருந்தபோது, 'செந்தில் பாலாஜியும் அவர் தம்பியும் கொள்ளை, கடத்தல் என கரூரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்' என்று கூறியுள்ளார். இப்போது மட்டும் அவர் புனிதமாகிவிட்டாரா என்ன? அன்று ஊழல்வாதி என கூறிவிட்டு, இன்று அமைச்சர் பதவி கொடுத்தது எப்படி? (செந்தில் பாலாஜியை முன்பு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்த வீடியோவை தற்போது காண்பித்தார்). "இதே ஸ்டாலின் நான் பெரும்பான்மையை நிரூபித்தபோது, சட்டையை கிழித்துக் கொண்டு வெளியே வந்தார். மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்தான் இப்படி செய்வார்கள். அப்படிப்பட்ட நிலையில் வந்தவர், இன்று இப்படி பேசுவதை ஏற்க முடியாது . தி.மு.க. எம்.எல்.ஏ. மருத்துவமனையில் கிட்னி முறைகேடு போன்ற தீவிர பிரச்சினைகள் நிலவி வரும் சூழ்நிலையில், நான் முகத்தை மூடியதா பிரச்சினை..? ரகுபதி அவர்கள் எங்களிடம் விசுவாசத்தை பற்றி பேசுகிறார். விசுவாசம் என்ன விலை எனக் கேட்பவர் தானே நீங்கள். எம்.ஜி.ஆரால் எம்.எல்.ஏ. ஆக்கப்பட்டு, அம்மா-வால் அமைச்சராக்கப்பட்ட நீங்கள், தி.மு.க.-வில் சேர்ந்துவிட்டு இவ்வாறு பேசுவதை ஏற்க முடியாது.

பிரதமர் சென்னை வந்தபோது எதிர்க்கட்சி தலைவராக இருந்து கருப்பு கொடி காட்டினார். முதல்-அமைச்சரான பின் பிரதமருக்கு, வெள்ளை கொடி காட்டியவர் மு.க.ஸ்டாலின். காங்கிரஸ் கட்சியில் சிலர், நாங்கள் 117 இடங்களில் போட்டியிடுவோம், ஆட்சி அதிகாரத்தில் இடம்பெறுவோம் என பேசி வருகின்றனர்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் இருவேறு நிலைப்பாட்டை எடுத்து வருகிறார். தி.மு.க.வுக்கு எவ்வளவோ தீங்கிழைத்தது காங்கிரஸ். காங்கிரஸ் உடன் உறவு கொள்ளவில்லையா தி.மு.க.? ஒரு முதல்-அமைச்சர் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறார் இவ்வாறு பேசுவது அவருக்கு அழகல்ல. எங்களை பற்றி விமர்சிக்க ஒன்றுமில்லாததால் எதை பேசுவது என்று தெரியாமல் முதல்வர் விமர்சனம் செய்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

## மோசடி செய்பவர்களை...(1-ம் பக்க தொடர்ச்சி)

இத்தகைய நீக்கங்கள் தனி மனிதர்களின் பிழைகள் அல்ல. மாறாக, மென்மொருட்களையும் மொபைல் போன்களையும் தவறாகப் பயன்படுத்தி திட்டமிட்ட முறையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட முறையிலும் நடத்தப்பட்டவை. இது சாதாரண பணியாளர் மட்டத்தில் நடத்தப்படவில்லை.

இந்த நடவடிக்கை காங்கிரசின் கோட்டைகளைக் குறிவைத்து நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, 2018-ம் ஆண்டில் 10 வாக்குச்சாவடிகளில் 8-ல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அந்த அளவுக்கு காங்கிரஸ் வலுவாக உள்ள தொகுதிகளில் வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இது தற்செயல் நிகழ்வு அல்ல. இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கை.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்வர் குமார், வாக்கு மோசடி செய்பவர்களை காப்பாற்றுகிறார். அதன்மூலம் நாட்டின் ஜனநாயகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறார். இந்த குற்றச்சாட்டை நான் எளிதாக முன்வைக்கவில்லை. மக்களவை எதிர்க்கட்சித் தலைவராகவே முன்வைக்கிறேன். இதற்கான ஆதாரம் தெளிவாக உள்ளது. அதில் எந்த குழப்பமும் இல்லை.

இந்த விவகாரம் தொடர்பாக கர்நாடகாவில் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. கர்நாடக சிஐடி 18 மாதங்களில் தேர்தல் ஆணையத்துக்கு 18 கடிதங்களை அனுப்பி உள்ளது. அவர்கள், தேர்தல் ஆணையத்திடம் சில எளிய கேள்விகளையே முன்வைத்துள்ளனர். ஆனால், அவர்களின் கேள்விகளுக்கு தேர்தல் ஆணையத்திடம் பதில் இல்லை. தேர்தல் ஆணையம் வழங்காததற்குக் காரணம், அது இந்த மோசடி நடக்கும் இடத்துக்கு ஒருவரை இட்டுச் செல்லும் என்பதால்தான். ஆனால், நாங்கள் உறுதியாக உள்ளோம்.

நான் முன்பு கூறியது போல, வாக்கு திருட்டு தொடர்பான ஹைட்ரஜன் குண்டு அல்ல இது. எனது வேலை ஜனநாயக அமைப்பில் பங்கேற்பது. அரசியலமைப்பு நிறுவனங்கள் தங்கள் வேலையை சரியாகச் செய்யவில்லை.

இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்தார்.





● தேனி மாவட்டம், வைகை அணையிலிருந்து நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, ஒருபோக பாசன நிலங்களுக்கு தண்ணீரை தேனி மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங், மதுரை மாவட்ட கலெக்டர் பிரவீன்குமார், திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் சரவணன், தங்கதமிழ்செல்வன் எம்.பி. ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

### திண்டுக்கல், மதுரை, சிவகங்கை பாசனத்துக்காக

# வைகை அணையில் இருந்து 120 நாட்கள் தண்ணீர் திறப்பு

### அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார்

ஆண்டிபட்டி, செப். 19-

**திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்ட ஒரு போக பாசனத்துக்காக 120 நாட்களுக்கு வைகை அணையில் இருந்து நேற்று (செப்.18) காலை தண்ணீரை அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார். இதன் மூலம் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 2 ஏக்கர் நிலங்கள் பலன்பெற உள்ளன.**

வைகை அணையில் இருந்து பெரியாறு பாசனப்பகுதியில் ஒரு போக பாசன பரப்பாகிய 85 ஆயிரத்து 563 ஏக்கர் நிலங்கள் மற்றும் திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஒரு போக பாசனப்பரப்பாகிய 19 ஆயிரத்து 439 ஏக்கர் என்று மொத்தம் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 2 ஏக்கர் நிலங்கள் பலன் பெற்று வருகின்றன. இப்பகுதி பாசனத்துக்க நீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனைத் தொடர்ந்து நேற்று காலை வைகை அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமை வகித்து தண்ணீரை திறந்து வைத்தார். தேனி, மதுரை, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்கள் ரஞ்ஜீத்சிங், கேஜே.பிரவீன்குமார், செ.சரவணன், தேனி எம்பி. தங்கதமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விநாடிக்கு ஆயிரத்து 130 கன அடி திறக்கப்பட்டது. இதே அளவு 45 நாட்களுக்கும், அடுத்த 75 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 120 நாட்களுக்கு 8 ஆயிரத்து 493 மில்லியன் கனஅடிநீர் திறக்கப்பட உள்ளது.

இதன் மூலம் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்துக்கு உட்பட்ட 53 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட 5ஆயிரத்து 697 ஏக்கர் நிலங்களும், மதுரை வடக்கு வட்டத்துக்கு உட்பட்ட 24 ஆயிரத்து 811 ஏக்கர் நிலங்களும், மேலூர் வட்டத்துக்கு உட்ட 48 ஆயிரத்து 963 ஏக்கர் நிலங்களும், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்துக்கு உட்பட்ட 478 ஏக்கர்நிலங்களும் சிவகங்கை வட்டத்துக்கு உட்ட 5 ஆயிரத்து 561 ஏக்கர் நிலங்களும், திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்துக்கு ட்பட்ட 146 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட ஆயிரத்து 201 ஏக்கர் நிலங்களும், உசிலம்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட 13 ஆயிரத்து 723 ஏக்கர் நிலங்களும், திருமங்கலம் வட்டத்துக்கு உட்பட்ட 3 ஆயிரத்து 982 ஏக்கர் நிலங்களும், பேரையூர் வட்டத்துக்கு உட்பட்ட 387 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 2 ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பாசன வசதி பெற உள்ளன.

ஆகவே திண்டுக்கல், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்த நீரை சிக்கனமாக பயன்படுத்தி உயர் மகசூல் பெறும்படி அமைச்சர் பி.மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் சிவபிரபாகரன், உதவி செயற்பொறியாளர்கள் சேகரன், முருகேசன், குபேந்திரன், வட்டாட்சியர் மருதுபாண்டி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பொதுக்கூட்ட விதிமுறைகளை...(1-ம் பக்க தொடர்ச்சி)

செப்.9 மற்றும் செப்.15ம் தேதிகளில் டி.ஜி.பி.-யிடம் கட்சி சார்பில் மனு அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, த.வெ.க சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வி.ராகவாச்சாரி, நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளையும், மற்ற கட்சிகள் மீது விதிக்கப்படாத நிபந்தனைகளும் த.வெ.க.வுக்கு விதிக்கப்படுவதாக" வாதிட்டார். எந்த வழியாக சென்னை திரும்ப வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், எத்தனை வாகனங்கள் வர வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டதாகவும் வழக்கறிஞர் வாதிட்டார். மேலும், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வரக்கூடாது என நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவர்களை வர வேண்டாம் என நாங்கள் எப்படி சொல்ல முடியும் எனவும் வழக்கறிஞர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது, இது போன்ற நிபந்தனைகள் அனைத்து கட்சிகளுக்கும் விதிக்கப்படுவது தானே ? என வினவிய நீதிபதி, முழுமையாக போக்குவரத்து பாதிக்கப்பட்டால் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா ? யாரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல. பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்திற்கு உட்பட்டு நடத்த வேண்டும். தலைவராக இருக்கும் நீங்கள் தான் கூட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். சேதப்படுத்தப்பட்ட பொது சொத்துகளுக்கான இழப்பீடு வசூலிக்கப்பட்டதா? இல்லையென்றால் இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட நேரிடும் எனவும் நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து பேசிய நீதிபதி, "கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வர வேண்டாம் என கோரிக்கை விடுத்து மற்றவர்களுக்கு நீங்கள் முன்மாதிரியாக திகழலாமே?" என அறிவுறுத்தினார். அப்போது, காவல்துறை சார்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ராஜ் திலக், "எந்த இடத்திலும் அனுமதி மறுக்கப்படாமல், நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுவதாக" வாதிட்டார். மேலும், திருச்சி பரப்புரையின் போது த.வெ.க. தொண்டர்களின் செயல்களை புகைப்படமாகவும் காவல் துறை வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதனை பார்த்த நீதிபதி, "இவர்கள் இது போன்று உயரமான இடங்களில் ஏறி நின்று ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் யார் பொறுப்பேற்பது ? இதனை நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டாமா?" எனவும் நீதிபதி கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விதிமுறைகளை வகுக்கவும் பொதுச் சொத்துகள் சேதமடைந்தால் அதற்கான இழப்பீட்டை வசூலிக்கும் விதமாக ஒரு குறிப்பிட்ட தொகையை டெபாசிட் செய்யும் வகையில் விதிமுறைகளை வகுக்க தமிழக காவல் துறைக்கு நீதிபதி உத்தரவிட்டார். மேலும், விதிமுறைகள் வகுப்பது குறித்து காவல் துறை பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதி வழக்கை செப்டம்பர் 24-ம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

### டாக்டர் ச.வெங்கடேசனின் பிறந்த நாளை முன்னிட்டு 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்:

# திருவள்ளூர் பகுதியில் 350 பெண்களுக்கு புடவை, அரிசி, 150 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு காக்கி உடை-அன்னதானம்

### மாதவரம் வி.மூர்த்தி - திருத்தணி கோ.அரி வழங்கினர்

சென்னை, செப் 19-

திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசனின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் பகுதியில் 350 பெண்களுக்கு புடவை, அரிசி 150 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு காக்கி உடை மற்றும் அன்னதானம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை 500 பேருக்கு முன்னாள் அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. திருத்தணி கோ.அரி ஆகியோர் வழங்கினர்.



சென்னை திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளரும், புரட்சித் தமிழர் எடப்பாடியார் பொது நலச்சங்க செயலாளருமான லயன் டாக்டர் ச.வெங்கடேசனின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் வீராபுரத்தில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மாதவரம் வி.மூர்த்தி, திருவள்ளூர் மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற செயலாளரும், அ.தி.மு.க. அமைப்புச் செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான திருத்தணி கோ.அரி ஆகியோருக்கு வில்லிவாக்க ஒன்றிய செயலாளர் ஜி.வி. செந்தில்குமார் தலைமையிலும், திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசன் முன்னிலையிலும் சிறப்பான எழுச்சி மிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. திருத்தணி கோ.அரி ஆகியோர் டாக்டர் ச.வெங்கடேசனை வாழ்த்தி நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானத்தை வழங்கினர். குறிப்பாக 350 பெண்களுக்கு புடவை, அரிசி 150 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு காக்கி உடை மற்றும் நற்கருணை இல்லத்தில் அன்னதானம் மற்றும் அரசு பள்ளி மாணவர்கள் 400 பேருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசன் சத்ய நாராயணன் அறக்கட்டளையை நடத்தி வருகிறார். இந்த அறக்கட்டளையின் மூலம் ஏழை, எளிய குழந்தைகளுக்கு கல்வி உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செய்து வரும் அவர், அ.தி.மு.க. கட்சி பணிகளையும் தொடர்ந்து செய்து வருகிறார். குறிப்பாக நடந்து முடிந்த அ.தி.மு.க. மதுரை மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையில் சென்னை, திருவள்ளூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 2000 ஆட்டோகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து மாநாட்டிற்கு களப்பணி ஆற்றினார். மேலும் லயன்ஸ் கிளப் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறார். செப்டம்பர் 17-ம் தேதி நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் விழாவிற்கு வில்லிவாக்கம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.வி. செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் மேனாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் கோ.வெற்றிவேந்தன், கே.ஜலபதிநாயுடு. எஸ்.நவராஜ், எம்.கே.அம்மா முருகேசன், எம்.பி.குமார், டி.குப்பன்,பி. குமார் ஐ.பிரியா இளங்கோ, ராமமூர்த்தி மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் என்.எழுமலை,வி. அய்யனார், ஏ.சங்கர், என்.பூங்காவனம்,மண்ணாங்கட்டி, சி.எழுமலை, என்.மாரி,கே. முருகேசன், குமரேசன்,எஸ்.ரமேஷ்,எம்.கோபால்,ராஜ்,ஏ. அர்ஜுனன், பி.ஹரிகுமார்,எல்.அன்பு, ஆனந்தன், ஜி.லாரன்ஸ்,கே. கோவிந்தராஜ், ஆர்.ராஜேஷ், கே.ராஜன், ஜே.கோவிந்தராஜ், எஸ். தியாகராஜன், ஏ.பிரகாஷ், எம்.சுரேஷ், எஸ்.விஜயபாபு, பா. ராமு, எம்.சுரேஷ், ஏ.மனோகர், எம்.தேவேந்திரன், ஆர்.ஆறுமுகம், எஸ். செல்லமுத்து, எஸ். விஜி, வினோத், ஆனந்த், எஸ். அண்ணாதுரை, எஸ்.வேலு, ஏ.அருண், வி.பாலச்சந்திரன், ஏ.ஜெயபிரகாஷ், கே.கோபி, ஏ.பாக்கியலட்சுமி, ஆர்.சரஸ்வதி, வி.லதா, ஏ.மல்லிகா மற்றும் வில்லிவாக்க் கிழக்கு ஒன்றியம் மோரை ஊராட்சி மற்றும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.